விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 08 புதன்கிழமை (20.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 063

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# சர்வதேச விமான நிலையமாக பலாலியை மாற்றுவது எதற்கு?

## கொந்தளிக்கும் மகிந்த அணியினர்



(கொழும்பு)

சர்வதேச விமான நிலையமாக பலாலியை . மாற்றுவது ஏன்? எதற்கு? என மகிந்த அணியினர் கேள்வி எழுப்பியுள்ளனர். மத்தலவை விட பலாலி மிகவும் சிறந்தது என்றும் முதலீட்டுக்கு ஏற்ப சிறந்த வருவாய் கிடைக்கும் என்ற முடிவுக்கு அரசு எப்படி வந்தது என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாநகரசபையின் பிரதி முதல்வருக்கு எதிராக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் பிரதி முதல்வருக்கெதிராக யாழ்ப்பாணம் பிரதேச செயலாளரினால் யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அரியாலை நெளுக்குளம் பகுதியில் 3000 ஏக்கர் காணி சுவீகரிப்பு தொடர்பில் காணி உரிமையாளர்கள் சுவீகரிப்புக்கெதிராக போரட்டங்களை முன்னெடுத்தனர்.

இதனால் இப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு யாழ். மாநகர பிரதி முதல்வரே காரணம் எனத் தெரிவித்தே யாழ்.பிரதேச செயலாளரினால் மேற்படி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை தெரியவருகிறது. (ம-101)

## ஐ.நாவிடம் அவகாசம் கோர கூட்டமைப்பு யார்?
### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கேள்வி

(பரந்தன்)

காணாமல் ஆக்கப்பட்ட எங்களது உறவுகளுக்கு நீதியை பெற்றுத்தர முடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு ஐ.நா.விடம் இலங்கை விடயத்தில் மேலும் கால அவகாசம் வழங்குமாறு கோரமுடியும் அதற்கு இவர்கள் யார்? மன்னார் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 23

## கொக்குவிலில் வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல்



### மோட்டார் சைக்கிளில் வந்த 8 பேர் கொண்ட குழு அடாவடி; வாகனங்களும் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுகள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டதால் வீட்டின் முன்பக்கம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் தீக்கிரையாகின. 23

## வேம்படி வீதி இன்று முதல் ஒருவழிப்பாதையாகிறது

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் போக்குவரத்து வசதி கருதி யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாகச் செல்லும் பலாலி வீதி குறிப்பிட்ட நேரத்துக்கு ஒருவழிப்பாதையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இன்று புதன்கிழமை தொடக்கம் இந்த ஒருவழிப்பாதை சேவையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பலாலி வீதி ஆஸ்பத்திரி சந்திக்கும் முதலாம் குறுக்கு வீதிச் சந்திக்கும் (ஏ-9 வீதியில்) இடைப்பட்ட வீதி இவ்வாறு குறிக்கப்பட்ட நேரத்துக்கு மட்டும் ஒரு வழிப்பாதை பயணமாக மாற்றப்படும். 23

## போதையை பயன்படுத்தும் அமைச்சர்கள் கொண்ட அரசு
### எவ்வாறு போதையை ஒழிக்கும் - மகிந்த ராஜபக்ஷ கேள்வி



(கொழும்பு)

கொக்கைன் போதைப்பொருளை பயன்படுத்தும் அமைச்சர்களைக் கொண்ட அரசாங்கம் எவ்வாறு. கொக்கைன் போதைப் 23

## கீரிமலை கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.கீரிமலை கடற்கரையில் ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை குறித்த பகுதியில் கடமையிலிருந்த காவலாளி பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக் 23

## இந்தியாவின் 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் வடக்கில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளது?
### சுசில் பிரேமஜயந்த கேள்வி



(கொழும்பு)

வட பகுதிய மக்களுக்காக இந்தியா வழங்கிய 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் எத்தனை வீடுகள் இதுவரை கட்டப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த கேள்வி எழுப்பியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில அமைச்சர்கள் நாட்டுக்காக எடுக்கும் தீர்மானங்களை பார்க்கும் போது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் கொக்கைன் பயன்படுத்துகின்றனர் என்று ரஞ்சன் ராமநாயக்க கூறியது உண் 23

## சீமெந்தின் விலை 100 ரூபாயினால் அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கையில் சீமெந்து உற்பத்தியில் ஈடுபடுகின்ற டோக்கியோ, இன்சி ஆகிய தனியார் உற்பத்தி நிறுவனங்கள் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் தமது உற்பத்திப் பொருளான சீமெந்து ஒரு பைக்கற்றுக்கு 100 23

## கூட்டரசாங்க பிரேரணை இவ்வாரம் விவாதத்துக்கு வராது - அமைச்சர் கிரியெல்ல

(கொழும்பு)

கூட்டரசாங்க பிரேரணை இவ்வாரம் விவாதத்துக்கு எடுத்துச் கொள்ளப்பட மாட்டாது என பாராளுமன்ற சபைத் தலைவரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்பட் 23

## வாள்வெட்டு குழுவுக்கு பயந்து
## வீட்டைவிட்டு தப்பிச்சென்ற மாநகர சபை உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை உறுப்பினரின் வீட்டுக்கு சென்ற வாள்வெட்டுக் குழு உறுப்பினரை தாக்க முயற்சித்த போது, உறுப்பினர் தப்பி சென்ற நிலையில் வீட்டில் அட்டகாசம் புரிந்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர். 23

# செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர் மீது பொலிஸார் தாக்குதல்

## யாழ். கொக்குவிலில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற பெற்றோல் குண்டு தாக்குதல் தொடர்பாக செய்திகளை சேகரிக்கச் சென்ற யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் தொலைக்காட்சி ஊடகவியலாளர் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று பகல் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்தில் செய்தி சேகரிப்பதற்காக தான் சென்றிருந்தபோது. தனக்கு அருகில் வந்த கோப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி, தன்னை அங்கிருந்து செல்லுமாறு கூறியதாகவும் அங்கிருந்து செல்ல தான் மறுப்பு தெரிவித்தமையால் தன்னை தாக்கியதாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த சம்பவத்தை காணொளியாக பதிவு செய்ய வேண்டாமென தெரிவித்தே தன்னை பொலிஸார் தாக்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த விடயம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். தாக்குதலுக்கு உள்ளான குறித்த ஊடகவியலாளர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3-10-89-101-285)

# யாழில் ஊனமுற்றவர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருகால்களையும் இழந்த ஊனமுற்ற ஒருவர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்கியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்,

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 8மணியளவில் யாழ்ப்பாணம் நவீன சந்தையடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பத்தில் கடுகன்னாவை கண்டியை சேர்ந்த 52 வயதுடைய ஆர்.பிரேமசிறி என்பரே இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3-10)

## மாணவ முதல்வர் தினமும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர் தினமும் மலர் வெளியிட்டு வைக்கும் நிகழ்வும் இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் சிரேஷ்ட மாணவ முதல்வர் செல்வன் நி. பிருந்தாபன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் என்.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், பொறியியலாளர் வி.ஜெயபிரகாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-3)


## வேலையாள் தேவை

உணவகம் ஒன்றுக்கு ரொட்டி தயாரிப்பவர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:

077 465 2860

(7569)

WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள நாடுங்கள்

உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.

TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214

E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(619)-5551)

## மணமகள் தேவை

77, அச்சுவினி, 25 பாவம், லண்டன் மணமகனிற்கு லண்டன் P.R மண மகள் தேவை.

தொடர்புகளுக்கு:

துர்க்கா திருமண சேவை

0778185978, 0750111122

(7600)

## பணியாளர்கள் தேவை

வரவேற்பாளர் பெண்

வடிவமைப்பாளர் ஆண்/பெண்

சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

SMART DIGITAL PRINTING

#255, Stanley Road, Jaffna.

Tel : 021 221 2958, Mob : 07 1650 1650,

e.mail : smartjaffna@gmail.com

MUG, BANNER, OFFSET, SCREEN PRINTING

(7599)

## பதவி வெற்றிடங்கள்

- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும் - வெளிக்களம்)
  தகைமை - க.பொ.த (உயர் தரம்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
  தகைமை - க.பொ.த (சாதாரண தரம்)

தகைமையும் ஆர்வமும் உடையவர்கள் இன்று (20.02.2019) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுயவிபரக்கோவை கொண்ட விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

வலம்புரி, பொது முகாமையாளர்,

இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் தர்மலிங்கம் கமலநாதன்

தோற்றம்: 03.01.1942 - மறைவு: 16.02.2019

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.சுரேஸ் அவர்களின் அன்பு மாமனார் அமரர் தர்மலிங்கம் கமலநாதன் அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(சி-5564)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் பாலாம்பிகை சண்முகநாதன்



எமது பாடசாலை முன்னாள் அதிபர் அமரர் கு.சண்முகநாதன் அவர்களின் துணைவியாரும் எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திருமதி கௌசலா நடராசா அவர்களின் அன்புத் தாயாருமாகிய திருமதி பாலாம்பிகை சண்முகநாதன் அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.

(சி-5564)

## இதய அஞ்சலிகள்

### அமரர் சிவநாயகம் கிருஸ்ணலிங்கம்



மூளாய் சுழிபுரத்தை சொந்த இடமாகவும் அழகொல்லை, அளவெட்டி மற்றும் இந்தியா சென்னையை வதிவிடமாகவும் கொண்டவரும், சிறந்த சமூகத் தொண்டன் தேவராணை, அளவெட்டி வடக்கைச் சேர்ந்தவரும் கனடாவில் வசிக்கும் இராசையா சிவகுமாரன் அவர்களின் அன்பு மைத்துனருமாகிய சிவநாயகம் கிருஸ்ணலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (18.02.2019) திங்கட்கிழமை இந்தியாவில் காலமானார். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எம் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

க.கணேசதாஸ் (J.P) குடும்பத்தினர்
ஓய்வுபெற்ற கிராம அலுவலர்,
அளவெட்டி வடக்கு. +919884843481

(5561)

# போதைப்பொருள் பாவனை தொடர்பான எந்தவொரு பரிசோதனைக்கும் நான் தயார்



## சுசில் அறிவிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள்பாவனை தொடர்பான எந்த வொரு பரிசோதனைக்கும் தான் தயாரென, நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் சிலர் போதைப் பொருள் பயன்படுத்துவதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளதுடன், அது தொடர்பான இரத்த மாதிரி பரிசோதனைக்கும் அழைத்திருந்ததாகவும் தெரிவித்துள்ள சுசில் பிரேமஜெயந்த தான் எந்தவொரு பரிசோதனைக்கும் தயாரென்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# போதைப்பொருள் விவகாரம்

## ரஞ்சனிடம் விசாரணை நடத்த ஜனாதிபதியிடம் கோரிக்கை



(பத்தரமுல்ல)

அமைச்சர்கள், போதைப் பொருள் பாவிப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்ட கருத்து குறித்து அவரிடம் விசாரணை நடத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இவ்விடயம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கோரிக்கை விடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லயில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே பியல் நிஷாந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தற்போது அமைச்சரவையிலுள்ள மக்கள் பிரதிநிதிகளில் பெரும்பாலானோர் கொக்கெய்ன் போதைப்பொருள் பயன்படுத்துகின்றனரென ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

ஆகவே, மக்கள் பிரதிநிதிகள் மீது இத்தகைய தொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ள ரஞ்சனின் கருத்து குறித்து ஆராய வேண்டும்.

இதனால், அவரிடம் விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என பியல் நிஷாந்த கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# கம்பரெலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வடக்கிற்கு இதுவரை 1658 மில்லியன் ஒதுக்கீடு

## அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தகவல்

(கொழும்பு)

கம்பரெலிய என்பது ஒரு துரித கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும்.

கடந்தகால அபிவிருத்தி உபாயங்கள் நகரத்தை ஒரு அபிவிருத்திக்கான கேந்திரஸ்தானமாக நோக்கிய காரணத்தினால் கிராமியமக்கள் அபிவிருத்தி நீரோட்டத்தில் கலக்கவில்லை.

இந்நிலைமையை மாற்றி கிராமத்தை அபிவிருத்தியின் கேந்திரநிலையமாக மாற்றி கிராமிய பொருளாதார சமூக உட்கட்டமைப்புக்களை வலுப்படுத்தி துரித கிராமிய அபிவிருத்தி மூலம் கிராமிய மக்களை அபிவிருத்தி நீரோட்டத்தின் பங்காளிகளாக மாற்றி அவர்கள் மூலம் கிராமிய திட்டங்களை அமுல்படுத்துவதே இத்திட்டமாகும் என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள்.மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இதன்கீழ் விவசாய குளங்கள் புனரமைப்பு, வீதிகள், பாலங்கள்,வடிகால் வசதிகள்,நீர்வழங்கல், சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதன் மூலம் கல்வித்துறை மேம்பாடு, பாடசாலைக் கழிவறைகள்,குடிநீர் வசதி, வாராந்த சந்தை,கிராம நகர இணைப்பு,ஆன்மீக செயற்பாட்டுத் தளங்கள் போன்ற 12 துறைகளின் கீழ் முன்னெடுக்கப்படும்.

இலங்கை பூராகவுமுள்ள தேர்தல் தொகுதிகளுக்கு 48 பில்லியன் ரூபாநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு தேர்தல் தொகுதிக்கு 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் வருகின்ற தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும்,இளைஞர் அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இச் செயற்றிட்டமானது மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு வாக்குப்பண கணக்கு ஒதுக்கீட்டில் 15 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 1,086 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 536 மில்லியன் யாழ்ப்பாணம், 200 மில்லியன் கிளிநொச்சி, 143 மில்லியன் மன்னார், 121 மில்லியன் முல்லைத்தீவு மற்றும் 86 மில்லியன் வவுனியா மாவட்டங்களுக்கு பல்வேறு உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமிய வீதிகள், பாலங்கள் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 928 மில்லியன் ரூபாவில் 424 மில்லியன் ரூபாவில் வீதிகளுக்கும் 41 மில்லியன் ரூபாவில் நீர்ப்பா



சனக் குளங்கள் அணைக்கட்டுகளுக்கும் 30 மில்லியன் ரூபா விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் 23 மில்லியன் ரூபா ஆன்மீக உட்கட்டமைப்பு வசதிகள் புனரமைப்பிற்கும் 17 மில்லியன் ரூபா பாடசாலை கழிவறை வசதிகள் உள்ளடங்கலான நீர்வழங்கல் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் வழங்கப்படுகின்றன.

கிளிநொச்சியில் 200 மில்லியன் நிதிஒதுக்கீட்டில் 156 மில்லியன் ரூபா கிராமிய வீதிகளுக்கும் சமயவழிபாட்டுத் தலங்களுக்கும் 21 மில்லியன் ரூபா விளையாட்டுத்துறை உட்கட்டமைப்புக்களுக்கு 14 மில்லியன் ரூபாவும் ஒதுக்கிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 187 மில்லியன் ஒதுக்கீட்டில் 57 மில்லியன் ரூபா கிராமிய வீதிகளுக்கு 56 மில்லியன் ரூபாவும் சமயவழிபாட்டுத் தலங்களை புனரமைப்பதற்கும் சிறுவர் பூங்காவிற்கு 4.4 மில்லியனும் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளுக்கு 3.4 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 203 மில்லியன் ஒதுக்கீட்டில் 45 மில்லியன் கிராமிய வீதிகளுக்கும் 34 மில்லியன் விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் 17 மில்லியன் ரூபா வணக்கத்தலங்களிற்கும் புனரமைப்பிற்கு 9 மில்லியன் ரூபாவும் சிறுகுளங்கள் மற்றும் அணைக்கட்டுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 140 மில்லியன் ஒதுக்கீட்டில் கிராமியவீதிகளுக்கு 47 மில்லியனும் கோவில்கள்,சமய தலங்களை புனரமைப்பிற்கு 22 மில்லியனும் விளையாட்டுத்துறை மேம்பாட்டிற்கு 11 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

கிராம எழுச்சி மூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் ஒரு அபிவிருத்தி உபாயமாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யும் கம்பெரலியத் திட்டம் "அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தி" என்ற தொனிப்பொருளில் பொருளாதாரத்தில் பாரியமாற்றத்தை ஏற்படுத்துகின்ற ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட்ட தேசிய கருத்திட்டமாக, தேசிய கொள்கைகள்.பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.(இ-7)

# இலங்கை மீனவர்கள் 25 பேர் இந்தியக் கடற்படையால் கைது

(நாகை)

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 25 இலங்கை மீனவர்களை, இந்தியக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்தியா- நாகை பகுதியில் குறித்த 25பேரும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், கைதுசெய்யப்பட்ட மீனவர்களைநாகை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர்களது படகுகள் காரைக்கால் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இலங்கைக் கடற்படையினர், ஒரு படகும் 5 மீனவர்களும் மாத்திரமே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை

## டுபாயில் கைதான அமல் பெரேரா எச்சரிக்கை

(டுபாய்)

தன்னைப் பற்றி பொய்யான பிரசாரங்களையும் தகவல்களையும் வழங்குகின்ற இலங்கையிலுள்ள ஊடக நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள பிரபல பாடகர் அமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

அமல் பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டதாக டுபாய் சென்றுள்ள சட்டத்தரணி உதுல் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

அத்தோடு டுபாயில் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் வர்த்தகரும் பாதாள உலகக்குழு தலைவர்களில் ஒருவருமான மாகந்துரே மதூஷ் உள்ளிட்ட 15 பேரையும் பொலிஸார் தொடர்ந்து தடுப்பு காவலில் வைத்துள்ளனர் எனவும் உதுல் பிரேமரத்ன தெரிவித்தார். (இ-7)

# பட்ஜெட்டை நிறைவேற்ற ஆதரவு இல்லை நாடாளுமன்றம் கட்டாயம் கலைக்கப்படும்

## மேல் மாகாண முதலமைச்சர் இசுறு உறுதி

(கொழும்பு)

அடுத்த வரவு- செலவுத் திட்டத்தை நிறைவேற்ற ஆளும் கட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் சமர்ப்பிக்கும் வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைந்தால், கட்டாயம்நாடாளுமன்றத்தை கலைக்க நேரிடும். 122 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறினாலும், எதிர்க்கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை திரட்ட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே கட்டாயம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதியும் கூறி வருகிறார் எனவும் இசுறு மேலும் தெரிவித்தார். (இ-7)

# போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் தொடர்பான தகவல்கள் சபாநாயகரிடம்

(கொழும்பு)

கொக்கெய்ன் உள்ளிட்ட போதைப்பொருள்களைப்பயன்படுத்தும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 24 பேர் தொடர்பான தகவல்களை சபாநாயகர் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் கையளித்துள்ளதாக பெருந்தெருக்கள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்காகச் செயற்படும் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர் ஒருவரும் கொக்கெய்ன் பயன்படுத்துபவர்கள் வரிசையில் இருப்பதாகவும் நீர் கொழும்பு பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர், அம்பாந்தோட்டை மாவட்ட மாகாண சபை உறுப்பினர் ஒருவரும் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுகிறார்கள் என்ற தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொக்கெய்ன் உள்ளிட்ட 11 வகையான போதைப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பான இரத்த பரிசோதனையை மேற்கொள்ள 4200 ரூபாய் செலவாவதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ரஞ்சன், எதிர் வரும் நாட்களில் தான் இந்த பரிசோதனையை மேற்கொண்டு அறிக்கையை சபாநாயகரிடம் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)



ஹோலி

# சென்னை - பெங்களூரு மோதல்

## முதல் கட்ட ஐபிஎல் அட்டவணை அறிவிப்பு

12வது ஐ.பி.எல்., 'சீசனுக்கான' முதற்கட்ட அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. முதல் போட்டியில் சென்னை அணி சொந்த மண்ணில் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) சார்பில் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.,) 'ரி20' தொடர் நடத்தப்படுகிறது. இதன் 12வது 'சீசன்' வரும் மார்ச் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் நடக்கவுள்ள தால் இம்முறை தொடர் இரண்டு கட்டமாக நடத்தப்படும் எனத் தெரிகிறது. முதல் இரண்டு வாரத்திற்கான அட்டவணையை பி.சி.சி.ஐ., வெளியிட்டுள்ளது. இக்காலகட்டத்தில் (மார்ச் 23 - ஏப்ரல் 5) மொத்தம் 17 போட்டிகள் நடக்க வுள்ளன.

முதல் போட்டியில் தோனி தலைமையிலான 'நடப்பு சம்பியன்' சென்னை அணி, விராட் ஹோலி யின் பெங்களூருவை எதிர்கொள்கிறது. இப்போட்டி சென்னை சேப்பாக்கத்தில் நடக்கவுள்ளது.

சென்னை அணி தனது மற்ற மூன்று போட்டி களில் முறையே டில்லி (மார்ச் 26, டில்லி), ராஜஸ்தான் (மார்ச் 31, சென்னை), மும்பை (ஏப்ரல் 3, மும்பை) அணிகளை சந்திக்கிறது.

ஏப்ரல் 5ல் நடக்கவுள்ள கடைசி போட்டியில் பெங்களூரு, கொல்கத்தா (பெங்களூரு) அணிகள் மோதவுள்ளன.

இது குறித்து பி.சி.சி.ஐ., வெளியிட்ட செய்தியில்,' பாராளுமன்றத் தேர்தல் விரைவில் நடக்கவுள்ளது. இதற்கான திகதிகள் அறிவிக்கப் பட்டபின், ஐ.பி.எல்., போட்டிக்கான அட்டவணையில் மாற்றம் வர வாய்ப் புள்ளது.' என தெரிவிக்கப்பட்டுள்ளது.


தோனி

# ஹெய்ல் ஓய்வு எப்போது?



ஹெய்ல்

இங்கிலாந்தில் நடக்கவுள்ள உலக கிண்ண தொடருக்கு பின், சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து விடை பெறப் போவதாக," மே.தீவுகள் வீரர் கிறிஸ் ஹெய்ல் தெரிவித்துள்ளார்.

மே.தீவுகளுக்கு சென்றுள்ள இங்கிலாந்து அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடருக்கான மே.தீவுகள் அணியில் (அதிகாரப்பூர்வமாக 'விண்டீஸ்') கிறிஸ் ஹெய்ல் இடம்பிடித்துள்ளார்.

கடைசியாக இவர், கடந்த ஆண்டு ஜூலை மாதம் பங்களாதேசுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் விளையாடினார். இதுவரை 284 ஒருநாள் போட்டிகளில் விளையாடி உள்ள இவர், 9727 ஓட்டங்களைக் குவித் துள்ளார். பகுதி நேர பந்துவீச்சாளரான இவர், 165 விக்கெடுக்களையும் சாய்த்துள்ளார்.

ஓய்வு குறித்து ஹெய்ல் கூறியதாவது, உலக கிண்ண தொடருக்கு பின், சில முக்கிய முடிவுகள் எடுக்க உள்ளேன். குறிப்பாக ஒருநாள் போட்டியில் இருந்து விடை பெற நினைக்கிறேன். இதன் மூலம் இளம் வீரர்களுக்கு வழி விட்டு, அவர்கள் விளையாடுவதை பார்க்க உள்ளேன். எனவே உலக கிண்ணத் தொடர், எனது கடைசி ஒரு நாள் தொடராக இருக்கும்.

மே.தீவுகள் அணி உலக கிண்ணம் வென் றால் அது மாயாஜால கதை யின் முடிவு போல இருக்கும். இளம் வீரர்கள் எனக்காக உலக கிண்ணம் வென்று தர கடமைப்பட்டுள்ளனர். இதற்காக அவர்களுக்கு நிறைய ஆலோசனை வழங் குவேன்.

நான் தான் உலகின் தலைசிறந்த வீரர் எனக் கூறுவதில் பெருமை கொள்கிறேன். இது எப்போதும் மாறாது. இவ்வாறு கெய்ல் கூறினார்.

# தோனியின் 'அனுபவம்' இந்தியாவுக்கு 'அவசியம்'


ரெய்னா

உலக கிண்ணத் தொடரில் அனுபவ மிக்க தோனியை இந்திய அணி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அதிரடி வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித் துள்ளார்.

50 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் மே மாதம் 30ஆம் திகதி தொடங்குகிறது. கிண்ணத்தை வெல் லும் அணிகளில் ஒன்று இந்தியா எனக் கருதப்படுகிறது.

ஆனால், 4ஆவது இடத்தில் யார் களமி றங்குவதுதான் பெரும்தலைவலியாக உள்ளது.

இந்நிலையில் தோனியின் அனுப வத்தை இந்திய அணி பயன்படுத்திக் கொள்ள வேண் டும் என்று இடது கை துடுப்பாட்ட வீரரான சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சுரேஷ் ரெய்னா கூறுகை யில், "சமீபத்தில் நடைபெற்ற அவுஸ்தி ரேலியா மற்றும் நியூசிலாந்து தொடரில் தோனி கணிசமான ஓட்டங்கள் அடித் துள்ளார். அதோடு இளம் வீரர்களை சிறப்பாக வழி நடத்துகிறார். குறிப்பாக இளம் பந்து வீச்சாளர்களுக்கு தோனி அறிவுரை பயனுள்ளதாக இருக்கிறது.

தோனி அதிக அளவிலான ஏற்றம் இறக்கங்களை கண்டுள்ளார். பல உலகக் கிண்ணத் தொடரில் விளையாடியுள்ளார். ஐபிஎல் இறுதிப் போட்டிகளில் அதிக அளவில் பங்கேற்றுள்ளார். இப்படி இருக்கும்போது ஏன் இந்திய அணியுடன் உலக கிண்ணத் தொடருக்கு அவர் செல்லக்கூடாது.

தோனி மிகவும் அற்புதமாக துடுப்பாட்டம் செய்து ஓட்டங்கள் குவித்து வருகிறார். இத னால் என்னை பொறுத்தவரையில் உலக கிண் ணத் தொடரில் தோனி நான்காவது இடத் தில் களம் இறங்க வேண்டும்" என்றார்.

# கொஞ்சம் அசந்தால் அவ்வளவுதான்

## ஆரோன் பின்ச் எச்சரிக்கை


ஆரோன் பின்ச்

இந்திய அணியுடனான தொடர் சவாலானதாக இருக்கும். போட்டி யில் கொஞ்சம் அசந்தால் போதும், இந்திய அணி சிறப்பாக விளையாடிவிடும். அப்புறம் வருத்தப்பட வேண்டியது இருக்கும்," என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஆரோன் பின்ச் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு இரண்டு 'ரி20', ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க உள்ளது.

முதல் 'ரி20' போட்டி வரும் 24ஆம் திகதி விசாகப்பட்டனத்தில் நடக்கிறது. ஒருநாள் தொடர் மார்ச் 2ல் ஐதாராபத்தில் ஆரம்ப மாகிறது.

இதற்கான அவுஸ்திரேலிய அணியில் 'சீனியர்' ஸ்ரீவ் ஸ்மித், வோர்னர் என இரு முன்னணி வீரர்கள் தடை காரணமாக களமிறங்க முடியாத நிலையில், தலைமைப் பொறுப்பேற்றுள்ள பின்ச் (வயது - 32), கூறியதாவது,

இந்திய ஒரு நாள் அணி சொந்த மண்ணில் சிறப் பாக செயல்படும். இவர்களை முழு நம்பிக்கையுடன், தெளிவான திட்டமிடலுடன் எதிர்கொள்ள வேண்டும். ஒரு வேளை கொஞ்சம் அசந்து விட்டால் அவ்வளவுதான். அப்புறம் மிரட்டத் தொடங்கி விடும். பிறகு வருத்தப்பட வேண்டிய நிலை ஏற்படும். இம்முறை அவுஸ்திரேலிய அணி தெளிவான மனநிலையில் களமிறங்குகிறது. இவ்வாறு பின்ச் கூறினார்.

# இந்தியா - பாக்., மோதல்

## ஹர்பஜன் சிங் ஆவேசம்


ஹர்பஜன் சிங்

காஷ்மீரின் புல்வாமா பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் சி.ஆர்.பி.எப்., வீரர்கள் மரணம் அடைந்தனர். இந்த நிலை யில், உலக கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா, பாகிஸ்தானு டன் (ஜூன் 16, மான்செஸ்டர்) மோதக்கூடாது என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

இது குறித்து இந்திய சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் கூறுகை யில்," நமது வீரர்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர். இந்த கடினமான கால கட்டத்தில், இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானுடன் விளையாடக் கூடாது. லீக் சுற்றில் இவர்களை சந்திக்காமல் இந்திய அணி யால் உலக கிண்ணத்தை வெல்ல முடியும். தேசத் தின் பக்கம் நாம் நிற்க வேண்டும். கிரிக்கெட், ஹொக்கி என எந்த விளையாட்டிலும் பாகிஸ்தானு டன் இந்திய அணி பங்கேற்க கூடாது. உயிர் இழந்த வீரர்களின் தியாகம் வீணாகிவிடக்கூடாது," என்றார்.

இது குறித்து பி.சி.சி.ஐ., அதிகாரி ஒருவர் கூறுகை கயில்," ஹர்பஜன் சிங் அவருடைய பார்வையில் பிரச்சினையை அணுகுகிறார். கடந்த 1999ல் கார்கில் போர் நடந்தபோது இங்கிலாந்தில் நடந்த உலக கிண்ணத் தொடரில் இந்திய அணி, பாகிஸ்தானு டன் விளையாடியது. இம்முறை, அரையிறுதி அல் லது பாகிஸ்தானை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் என்ன செய்வது," என்றார்.

**ஐ.சி.சி.,மறுப்பு**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைமை செயல் அதிகாரி ரிச்சர்ட்சன் கூறுகை யில், "விளையாட்டு என்பது அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கும் தற்போதைய நிலையில், உலக கிண்ணத் தொடரில் எந்தவொரு போட்டியையும் ரத்து செய்யும் திட்டம் எங்களிடம் இல்லை," என்றார்.

# யாழில் இராணுவம் நிதி சேகரிக்கவில்லை

## கட்டளைத் தளபதி தர்ஷன மறுப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களை புனரமைப்பது உட்பட எந்தவொரு வேலைத் திட்டத்துக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தால் நிதி சேகரிக்கப்படவில்லை என இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.



பலாலியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள சீருடை அணிந்த இராணுவத்தினரால் சுன்னாகத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் நிதி சேகரிக்கப்படுவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இதை மறுத்து நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், இந்து ஆலயங்களை புனரமைப்பது உட்பட எந்தவொரு வேலைத்திட்டத்துக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தால் நிதி சேகரிக்கப்படுவதாக இல்லை, மாறாக தென்னிலங்கை மக்களிடம் இருந்து கிடைக்க பெறுகின்ற நிதி பங்களிப்புகள் மூலமாகவே எமது மனித நேய வேலைத்திட்டங்களை யாழ்ப்பாண மாவட்டத்தில் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில் இராணுவத்தினரால் ஆலய புனரமைப்புக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் நிதி சேகரிக்கப்படுவதாக வெளியாகி உள்ள செய்தி எம்மை பேரதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

யாழ். மாவட்ட தளபதி என்கிற வகையில் நாம் அறிந்த வரையில் நிச்சயமாக இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பமும் கிடையாது.

ஏனென்றால் அந்த மாதிரியான நிதி சேகரிப்புக்கு எந்த மாதிரியான சூழ்நிலையிலும் நாம் உத்தரவிடவே இல்லை.

எது எப்படி இருந்தாலும் இராணுவத்தின் பெயரை பயன்படுத்தி எவரேனும் யாழ். மாவட்டத்தில் நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்ற பட்சத்தில் உடனடியாக யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்துக்கு தெரியப்படுத்துமாறு வேண்டிக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனநாயகத்தை பாதுகாத்த நாடு இலங்கைக்கு அங்கீகாரம்

## சபாநாயகர் கரு ஜெயசூரிய மகிழ்ச்சி

(காலி)

ஜனநாயகத்தை பாதுகாத்த நாடு என்ற சர்வதேச அங்கீகாரத்தை இலங்கை பெற்றுள்ளதென சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

காலி-நுகதுவ பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே கரு ஜெயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் இலங்கை முன்னோடியாகத் திகழ்வதாக கூறி, சர்வதேச அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை நாட்டுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியென கரு ஜெயசூரிய மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

ஆகையால் ஜனநாயகத்துக்கு விரோதமாக முன்னெடுக்கப்படும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் எதிராக மக்கள் குரல் கொடுக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

# மதூஷின் சொத்து மதிப்பு ரூ.500 கோடிக்கு மேல்

## பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு தகவல்

(டுபாய்)

டுபாயில் கைதுசெய்யப்பட்ட போதைப்பொருள் வர்த்தகரும் பாதாள உலகக்குழு தலைவர்களில் ஒருவருமான மாகந்துரே மதூஷின் சொத்துக்கள் 500 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புடையதென பயங்கரவாத தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

அந்த வகையில் மதூஷின் வங்கிக் கணக்குகளை பயங்கரவாதப் தடுப்புப் பிரிவினர் தொடர்ந்து சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இதன்படி டுபாய் மற்றும் இலங்கையிலுள்ள 23 வங்கிக் கணக்குகள் இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹெரோயின், கொக்கெய்ன் ஆகிய சட்டவிரோத செயற்பாடுகளின் மூலம் பெற்ற பணம், கொலை ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட பணம் ஆகியவை அடங்கலாகவே 500 கோடி ரூபாயை மதூஷ் வைப்புச்செய்துள்ளதாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப விரைவில் நியமனங்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளில் நிலவும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவ தாக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.

துறைசார் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கென தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கான போட்டிப்பரீட்சைகள் நிறைவடைந்த நிலையில் வெகு விரைவில் அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# மரண அறிவித்தல்

## பாலாம்பிகை சண்முகநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியை)



நல்லூர் செட்டித்தெருவை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.பாலாம்பிகை சண்முகநாதன் 19.02.2019 நேற்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் (முன்னாள் அதிபர், கரந்தன்இராமுப் பிள்ளை வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் தெட்சணாமூர்த்தி - கமலாவதி தம்பதிகளின் அன்பு மகளும் குமாரவேலு-மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் தர்மராசா அவர்களின் பாசமிகு சகோதரியும் கௌசலா (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர்), குகதாஸ் (பிரதம கணக்காளர், சுகாதார அமைச்சு-வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நடராஜா (ஓய்வுநிலை, பிரதேச சபை செயலாளர், காலஞ்சென்ற கோமதி (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் யசோதரா (கனடா) அவர்களின் அன்பு மைத்துனியும் பிரசாந்தன் (வர்த்தக வங்கி-கொழும்பு), பிரதாபன் (HNB, கொடிகாமம்), பிரதீபன் (Modern Soft Technologies Colombo), சரண்யா (யாழ்.மருத்துவ பீடம், 1ஆம் வருடம்), சாருஜன் (யா/இந்துக்கல்லூரி),தாரங்கா (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20.02.2019 புதன்கிழமை 10.30 மணியளவில் ஆரம்பமாகி நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(7595)

தகவல்:
குடும்பத்தினர்.

# இராசி பலன்

**மீனம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உற்சாகமான நாள்.

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தன வரவில் இருந்த தடைகள் அகலும்.

**மிதுனம்:** சகோதர ஒத்துழைப்பால் பகைப்பிரிவினைகள் சுமகமாக அமையும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**மகரம்:** தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுமைகளும், பொறுப்புகளும் கூடலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | ராகு |
| சூரி, புத | இராசி பலன் | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம் | | சந் |
| சனி, கேது, சுக் | குரு | | |

20.02.2019
மாசி 08, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
பிரதமை முன்னிரவு 7.47 மணிவரை
மகம் முற்பகல் 9.24 மணிவரை
சுபநேரம் 5.02-6.32 மணிவரை
இராகுகாலம் 12.32-2.02 மணிவரை

வளவன்

**தனுசு:** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கியமானவர்களைச் சந்திப்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**துலாம்:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கன்னி:** சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், சஞ்சலங்கள் கூடும் வாய்ப்புண்டு.





யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் காலை வெகு சிறப்பாக இடம்பெற்றது.

(படங்கள் - ஐ.சிவசாந்தன்)

# அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன் விழா எதிர்வரும் மார்ச் மாதம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான 'கம்பன் விழா" எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையான மூன்று நாட்கள் யாழ்ப்பாணம் நல்லூரில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவானது அகில இலங்கைக் கம்பன் கழகம் ஆரம்பிக்கப்பட்டு நாற்பதாம் ஆண்டை, நிறைவு செய்திருக்கும் இந்நிலையில் சிறப்புற ஏற்பாடாகிறது.

கம்பன் விழாவின் காலை நிகழ்ச்சிகள், நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள கம்பன் கோட்ட மேல் மண்டபத்திலும் மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீதுர்க்கை அம்மன் மணிமண்டபத்திலும் நடைபெறவுள்ளன. இவ்விழாவில் நம்நாட்டு, தமிழ்நாட்டு அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்க்க உள்ளனர்.

வழமைபோல இவ்வாண்டும் இவ்விழாவில் பட்டிமண்டபம், வழக்காடு மன்றம், கவியரங்கம், கருத்தரங்கம், இலக்கிய ஆணைக்குழு, இலக்கியப் பேருரை, விவாத அரங்கம் போன்ற நிகழ்ச்சிகளோடு நாட்டிய வேள்வி நிகழ்வும் நடைபெற உள்ளது.

விழாவில்கலந்து கொள்ள விரும்புவோர் தனிப்பட்ட அழைப்பிதழைப் பெற வேண்டின் கம்பன் கோட்டம், இல. 300, கோயில் வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு தங்கள் விபரங்களை அனுப்பி வைக்கலாம்.

கல்லூரிகள் தமது மாணவர்களை இவ்விழாவில் கலந்து கொள்ள வைக்க விரும்பின் 077 293 5509 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முன் ஒழுங்கு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (7)

# அடையாளம் காணப்படாத சடலத்தை பொறுப்பேற்கவும்

பெருமாள் பரமசிவம் எனும் 65 வயதுடைய நோயாளர் கடந்த 3 ஆம் திகதி ஊர்காவற்றுறை பொலிஸ் அதிகாரியால் அனுமதிக்கப்பட்டு கடந்த 11 ஆம் திகதி இறந்து விட்டார்.

இவரது சடலத்தை உறவினர் எவரும் உரிமை கோராத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த சடலத்திற்கு உரித்துடையவர் அடையாளம் காட்டி 7 தினங்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார். (7)

# தெருவிளக்கு பொருத்த மக்கள் கோரிக்கை!

(வரணி)

வரணியில் அமைந்துள்ள சந்தைப்பகுதியானது கடைத்தெருக்கள் அதிகம் உள்ள பகுதியாக விளங்குவதோடு மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியாகும். இப்பிரதேசத்தில் தெரு விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவுவேளைகளில் இருள் சூழ்ந்து காணப்படுவதுடன் மக்கள் கடைகளுக்கு வந்து பொருட்களை வாங்குவதற்கும் அச்சப்படுகின்றனர்.

மேலும் இவ்வீதியால் பயணிக்கும் மக்களும் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே சாவகச்சேரி பிரதேச சபையினால் முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டிருந்த தெரு விளக்குகளும் பழுதடைந்து மூன்று வருடங்களுக்கு மேலாகின்றது.

ஆகவே சந்தைப்பகுதியில் தெருமின்விளக்குகளைப் பொருத்துவதற்கு பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வியாபாரிகள், பொதுமக்கள் வேண்டுகோள் விடுப்பதுடன் ஏற்கனவே பழுதடைந்து இருக்கும் தெருவிளக்குகளையும் பழுது பார்க்க வேண்டும்எனவேண்டுகோள் விடுக்கின்றனர். (5-103)

# திருட்டுக் குற்றச்சாட்டில் கைதடியில் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

தென்மராட்சி- கைதடிப் பகுதியில் வீடொன்றில் திருடிய குற்றச்சாட்டில் சந்தேக நபரொருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீடொன்றில் திருடியதாக வீட்டின் உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சில மணி நேரத்தில் சந்தேக நபரைக் கைது செய்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் திருட்டுப்போன பணம் மற்றும் பெறுமதியான வீட்டுப் பொருட்களையும் மீட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். (5-30)

# வங்கிக் கிளை ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வரணிப் பிரதேசமானது ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பரந்த கிராமமாகும்.

இங்கு பதினான்காயிரத்திற்கும்மேற்பட்ட மக்கள்வசிக்கின்றனர். அத்துடன் பாடசாலைகள், கடைத் தொகுதி, பொதுச்சந்தை, நூலகம், சமுர்த்தி காரியாலயம், கலாசார மண்டபம்பனை-தென்னை வள உற்ப த்தி நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகள், வைத்தியசாலை, தபால்நிலையம் போன்ற நிறுவனங்களும் காணப்படுகின்ற போதிலும் இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் தமது பணம் தொடர்பான நடவடிக் கைகளுக்கு வங்கியொன்று இல்லாமையால் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுப்பதோடு இன்னல்களுக்கும் ஆளாகின்றனர்.

வங்கி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நெல்லியடி மற்றும் கொடிகாமம் நகரங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் அவர்களது நேரம் வீண்விரயம் ஆவதுடன் தொழில் நடவடிக்கைகளும் பாதிப்புக்குள்ளகின்றன. அத்துடன் பண விரயமும் வீண் அலைச்சலும் ஏற்படுகின்றது.

ஆகவேவரணியின்மையப்பகுதியான பொதுச்சந்தையை அண்டிய பகுதியில் அரச வங்கிக் கிளையொன்றினை ஆரம்பித்து தமது வங்கித்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள்விடுக்கின்றனர். (5-103)

## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் 22 ஆம் திகதிவெள்ளிக்கிழமைமாலை 4 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். (7-5)




# தியாகராஜ சுவாமிகளின் 172வது இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத்துணைத் தூதரகத்தின் அனுசரணையுடன் வடஇலங்கைச் சங்கீத சபை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 172 ஆவது இசை ஆராதனை நிகழ்வு நாளை மறுதினம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் வட இலங்கைச் சங்கீத சபையின் தற்பரானந்தன் கலையரங்கில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவருமான சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன், சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (7-5)



சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியின் புதிய கட்டடத் திறப்பு ஏர நேற்று முன்தினம் 18 ஆம் திகதி நடைபெற்றது. இதில் விருந்தினராக பொது முகாமையாளர் தம்மிக பெரேரா, உடுவில் பிரதேச செயலாளர் ஜெயகாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- தாவடிச் செய்தியாளர்)

## ஆளுநரின் பொதுமக்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

ஆளுநரின்பொது மக்கள் தினம் கடந்த வாரம்போலவே இன்று ஆளுநரின் தலைமையில் கைதடியில் அமைந் துள்ள முதலமைச்சர் அமைச்சு செயலகத்தில் நடைபெறும்.

வடமாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் பொது மக்கள் தினம் இடம் பெறும் என வடமாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (இ-7)

## மத நல்லிணக்க நடை பவனி

(கைதடி)

சாவகச்சேரி பிரதேச இளைஞர் சபையினரால் ஐக்கிய நாடுகள் சபையினரால் பிரகடனப்படுத்தப்பட்ட மத நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு சமாதானம் மற்றும் மதநல்லிணக்க நடைபவனி மற்றும் ஒன்றுகூடல்நிகழ்வும் கைதடியில் இளைஞர் சபையின் தலைவர் நக்கீரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றன.




இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய ஆலோசகர் ஏரந்த பீரிஸ் கலந்து கொண்டார். (இ-9)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

யாழ்.நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக் குமாகாண கல்வி அமைச்சின் உதவிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) நா.கந்ததாசன் கலந்து கொள்வர். (இ-134,10)


யா/நீர்வேலி சி.சி.த.க பாடசாலை

மைதான முகப்பு வாயில் திறப்பு விழாவும்
வருடாந்த மெய்வன்மை திறனாய்வும்-2019

இடம்: பாடசாலை மைதானம்
காலம்: 20.02.2019 புதன்கிழமை பி.ப 01.30 மணி

தலைவர்:
திரு.தி.ரவீந்திரநாதன்
(வித்தியாலய முதல்வர்)

பிரதம விருந்தினர்:
திரு.நா.கந்ததாசன்
(உதவிக்கல்விப் பணிப்பாளர், நிர்வாகம்,வடக்கு மாகாண கல்வி அமைச்சு)

சிறப்பு விருந்தினர்கள்:
சோ.சொக்கலிங்கம்
(ஓய்வு நிலை பொது முகாமையாளர், இ.போ.ச.,கோண்டாவில், பழைய மாணவன்)
திரு.அ.கிருபாகரன்
(முதல்வர், கிருபா லேணர்ஸ் யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர்கள்
திரு.வ.அஜந்தன்
(பழைய மாணவன், கனடா)
திருமதி.அ.கம்சினி
(பழைய மாணவி, கனடா)

அனுசரணை
கிருபாலேணர்ஸ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பாடசாலை சமூகம்.
(C-5559)


## கெப்-மோட்டார் சைக்கிள் விபத்து; சம்பவ இடத்திலேயே ஒருவர் பலி!



(மண்முனை)

மட்டக்களப்பு, தாழங்குடா, மண்முனை பிரதான வீதியில் கெப் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கொக்கட்டிச்சோலையை சேர்ந்த 44 வயதுடைய எம்.ஜெயக்குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்கான ஆரையம்பதி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார்மேற் கொண்டு வருகின்றனர். (7)


பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-7590)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



குழந்தையின்மைக்கான சிகிச்சை

இயற்கை முறையில் குழந்தை பாக்கியம் பெற பாரம்பரிய முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது. பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் ஒழுங்கின்மை, சினைமுட்டை இல்லாமை, கர்ப்பப்பை நீர்க்கட்டி, சூலகநீர்க்கட்டி (PCOS) அதனால் ஏற்படும் தைரொயிட் பிரச்சினை, உடற்பருமன், Ovarian Hyperstimulation syndrome, மனரீதியான அழுத்தம் மற்றும் ஆண்களில் ஏற்படும் விந்துற்பத்திக் குறைபாடு, போதிய விந்தணுக்கள் இல்லாமை இவற்றுக்கு சிறப்பான பாரம்பரிய சிகிச்சை வழங்கப்படுகிறது.

Dr.G.Sritharan B.S.M.S. (SL), M.phil (Jaf), PGD. in Ayurvedic surgery (Scholar) (Kelany) Reg.No 10093

Dr.(Mrs) S.Anpuchelvy B.S.M.S (SL), M.D(S)(India) Reg.No 10434

தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.021 222 2537, 075 041 3579, 077 820 1195 முற்பதிவு அவசியம். சனிக்கிழமை பி.ப 1 மணிக்கு உடுவில் றோசாவில்லாவில் ஆயுர்வேத சிகிச்சை வழங்கப்படுகிறது.

ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்
65, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.
(பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)
(7590)



கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பரணி
செவ் 4 ல்
தகைமை/தொழில்: A/L,France
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/9336

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 34
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L, Senior Ref London
எதிர்பார்ப்பு: Dentist,Physiotherapist
தொ.இ: B/9342

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: 12 1/4செவ் 12 ல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:A/L, Qatar
எதிர்பார்ப்பு:படித்தபெண்
தொ.இ: B/9344

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: 16 செவ் 12 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: CIMA , Bank
எதிர்பார்ப்பு: அரசதொழில்,வங்கி
தொ.இ: B/9346

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1986 இந்துஷ
நட்சத்திரம்: உத்தரட்டாதி
செவ் 7 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.Sc,M.Sc, Lecturer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/9376

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.Sc, Reading M.Sc, Engineer
எதிர்பார்ப்பு: Doctor,Engineer, வெளிநாடு
தொ.இ: G/9378

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரேவதி 2
கி.பா: 04
உயரம்: 5'
தகைமை/தொழில்:O/L, சொந்ததொழில்
எதிர்பார்ப்பு:சொந்தநிரந்தரதொழில்
தொ.இ: G/9382

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 63செவ் 1 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: அரசதனியார் சொந்த தொழில்
தொ.இ: G/9384

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை மைதான திறப்பு விழாவும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் 15.02.2019 அன்று நடைபெற்ற போது மைதானத்திற்குரிய காணியை அன்பளிப்பாக வழங்கிய பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

செங்கைப்புரவோன்
உயர்திரு. இராசையா குவேந்திரநாதன்

அவர்களின் தன்னலங்கருதாச் சேவையினைப் பாராட்டி பாடசாலைச் சமூகத்தினரால்

"தருமப்பிரபு"

என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்,
விஸ்ராவிசன்,யாழ்ப்பாணம்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# எள்ளும், நல்லெண்ணெயும், எள்ளுப்பிண்ணாக்கும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


எள்ளில் காணப்படும் கொழுப்பானது உறையாத தன்மையுடைய அதியுயர் கொழுப்பாகும் (Unsaturahed fat). எனவேதான் இதில் தயாரிக்கும் சகல உணவுகளும் (எள்ளுருண்டை, எள்ளுத்துவையல், எள்ளுப் பிண்ணாக்கு) சிறந்தவையாக அமைகின்றன.

எள்ளுணவுகள் போசாக்கு நிறைந்தவையாக அமைகின்றன. குழந்தைகளில் பல்முரசு வியாதி ஏற்படாநிலையைப் பாதுகாக்கவும் செய்கிறது.

எள்ளில் உயிர்ச்சத்து A இற்கு முன்னோடியாக கரோட்டின் போதியளவு காணப்படுகின்றது. அத்துடன் தயமின் சத்தும் உண்டு.

எள்ளுப் பிண்ணாக்கு துப்புரவாகத் தயாரிக்கப்படல் வேண்டும். எள்ளை நன்றாக கழுவிக்காய வைக்க வேண்டும். அதன்பின் செக்கில் போட்டு துவைக்கப்பட்டு எண்ணெயைப் பெற்ற பின் பெறப்படுவதே எள்ளுப்பிண்ணாக்கு எனப்படும்.

அத்துடன் கொலஸ்ரோல் அதிகரிப்பு ஏற்படுத்தா நிலையை



பேணவும் உதவும்.

எள்ளு உணவு சகல வயதினருக்கும் பொருந்தக் கூடியது.

100 கிராம் எள்ளில் அடங்கும் சத்துக்கள் கொழுப்பு (எண்ணெய்) 40-57 %,புரதம் 20-25%, கல்சியம் 1450 மி.கிராம், இரும்புச் சத்து 9 மி. கிராம், எள்ளுப் பிண்ணாக்கில் 40-48 % புரதம் உண்டு.

இதேபோன்று நல்லெண்ணெயில் காணப்படும் நிரம்பற கொழுப்பு அமிலமும், கிளிசரோலும் உடலில் செறிவு கூடிய கொழுப்புப்புரதம் உருவாவதற்கு உதவுவதால் கலங்களிலும் நாடிகளிலும் உள்ள கொலஸ்ரோல் அவ்விடங்களிலிருந்து வெளியெடுக்கப்படுகின்றன. இதனால் தான் இருதய நோய் பாதிப்புள்ளவர்கள் நல்லெண்ணெய் பாவிப்பதற்கு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

நல்லெண்ணெய்க் குளியல், நல்லெண்ணெய் பொரியல், நல்லெண்ணெய் தீபம், நல்லெண்ணெய் கலந்து உண்பது, எள் தீபம் ஏற்றுதல் போன்ற சகல செயற்பாடுகளின் ஊடாக நல்லெண்ணெயின் மருத்துவப் பயன்களை நாம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

நல்லெண்ணெயில் காணப்படும் லெசித்தீன் என்ற பொருள் இரத்தத்தில் காணப்படும். அதிகப்படியான கொழுப்பை அகற்றி கட்டுப்படுத்தும் பண்பு மிக்கது. பொதுவாக உடலில் கொழுப்பை சேரவிடாமல் தடுத்து இரத்தத்தினை சுத்தப்படுத்தவும் கூடியது. இதில் உயிர்ச்சத்து A, துத்தநாகம், உயிர்ச்சத்து E, செம்பு, கல்சியம்,மக்னீசியம் போன்ற தாதுக்கள் அடக்கியுள்ளதால் எளிதாக சருமத்துக்குள் ஊடுருவக் கூடியதுடன் எண்ணெய்ப் படையை அகற்றி தோல் பகுதியை சுத்தமாக வைத்திருக்கவும் உதவுகின்றது.

கர்ப்பிணித் தாய்மார்கள் முதல் ஐந்து மாதங்களுக்கு எள்ளை கூடுதலாக எடுப்பதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் கருச்சிதைவை ஏற்படுத்தலாம். ஆனால் கர்ப்பிணித்தாய்மார் 7 ஆம் மாதத்தின் பின்பு எள், பனங்கட்டி சேர்த்து துவைத்து 1,2 உருண்டைகள் வாரத்தில் 3 நாட்கள் சாப்பிடலாம். இதனால் இரத்த விருத்தி உண்டாவதுடன் மலச்சிக்கலும் தீரும்..

மூலநோய் உள்ளவர்கள் எள்ளு விதைகளை அரைத்து விழுதாக்கி 5 கிராம் எடுத்து வெண்ணெயில் சாப்பிட குருதி வெளியேறல் குறையும். எள்ளு விதைகளை சுத்தம் செய்து பொடித்து 2-4 கிராம் அளவு தேனுடன் கலந்து காலை, மாலை 5 நாட்கள் சாப்பிடக் கொடுக்க மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலி தீரும்.

இதன் விதைகள் 30 கிராம் எடுத்து 200 மில்லி நீரில் ஊற வைத்து பருக மாதவிடாய்க்காலத்தில் ஏற்படும் உதிர (இரத்த) ச்சிக்கல் நீங்கும்.

தினமும் காலையில் நல்லெண்ணெய் இரு கண்களிலும் 3 துளி வீதம் விட்டு தலையிலும் பூசி சுட்டாறிய தண்ணீரில் அடுத்தடுத்து 3 நாட்கள் தலை முழுகி வர கண் வலி, கண் கூசல் மண்டைக்குத்து ஆகிய நோய்கள் நீங்கும்.

## புகையிரதக்கடவையில் காவலாளி இல்லை பாரிய ஆபத்து; மக்கள் அச்சம்



(சாவகச்சேரி)

கொடிகாமம் -நாவலடி புகையிரதக் கடவை காவலாளி இல்லாத காரணத்தால் பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் காணப்படுகிறது. குறித்த கடவையில் ஏற்கனவே உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதுடன், பலர் மயிரிழையில் உயிர் தப்பியுமுள்ளனர். கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை வேளையில் கூட இருவர் கடவையைக் கடக்கும் போது நொடிப் பொழுதில் உயிர்பிழைத்துள்ளனர். குறித்த கடவைப்பகுதி வளைவாகக் காணப்படுவதால் புகையிரதம் வருவதனை குறுகிய நேர இடைவெளியில் தான் அவதானிக்க முடிவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

மனித உயிரை துச்சமாகக் கருதும் செயல்கள் யாழில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

இதுபோன்ற அசண்டையீனங்களுக்கு எதிர் வரும் காலங்களில் இடம் கொடுக்காது அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-30)

## இருவர் நீரில் மூழ்கிப்பலி

(புத்தளம்)

புத்தளத்தில் நேற்று முன் தினம் மாலை இளம் காதலர்கள் ஏரியில் குளித்து கொண்டிருந்த போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

புத்தளம், நவத்தேகம, வெலே வெவ பிரதேசத்தில் உறவினர்கள் வீட்டிற்கு சென்றிருந்த காதலர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வென்னப்புவ பிரதேசத்தை சேர்ந்த 21 வயதான இளைஞன் மற்றும் 17 வயதான யுவதியுமே நீரில் மூழ்கியுள்ளனர்.அவரை காப்பாற்ற முற்பட்ட போதே குறித்த இளைஞனும் நீரில் மூழ்கி மரணித்துள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. (7)

## 30 வருடங்களுக்கு மேலாக வீதி புனரமைக்கப்படவில்லை



கைதடி மேற்கு நவனிய வத்தை வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் இருப்பதாக அப் பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த வீதி 2 கிலோ மீற்றர் நீளமாகக் காணப்படுவதுடன் தினமும் அதிகளவிலான பொதுமக்கள் பயன்படுத்தும் வீதியாகவும் உள்ளது.

இவ் வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் அதிகளவில் சிரமப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே குறித்த வீதியைப் புனரமைப்பதற்கு அரச அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் நடவடிக்கையெடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-111-10)





யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் திருமதி. லதாவதி பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வலிகாம வலய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) சு.தேவ மனோகரன், கல்வி இராஜாங்க அமைச்சின் இணைப்பாளர் பா.சுரேஸ்குமார். ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மும்மொழிகளிலும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை மூன்று மொழிகளிலும் வழங்க எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம் சத்துர விதான தெரிவித்தார்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பதியப்படுவதுடன் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய இலட்சனையும் பொறிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# அபிவிருத்தி தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குங்கள்

## ஜனாதிபதி மைத்திரி வேண்டுகோள்



(கொழும்பு)

இந்த ஆண்டு தேர்தல் ஆண்டான போதிலும் அனைத்து அரச ஊழியர்களும் நாட்டின் அபிவிருத்தி தேவைகளை இனங்கண்டு அவற்றை எட்டுவதற்கு முன்னுரிமை தரவேண்டுமென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டுக்கொண்டுள்ளார். "இது தேர்தல் ஆண்டு. தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கப்போகின்றன?. யார் யாரெல்லாம் அதிகாரத்தை பிடிக்கப்போகிறார்கள்? என்பதைப் பார்த்துக்கொண்டிருந்தால் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பாதிக்கப்படும்" என்று கூறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டின் அபிவிருத்தி வேகம் ஏற்கனவே பின்தள்ளியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

எனவே தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த இவ்வருடம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

கிராம சக்தி அமைப்பின் மேல் மாகாண வழிநடத்தல் குழு கூட்டம் கம்பஹா கோல்டன் ரீச் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே மேற்கூறியவாறு தெரிவித்தார்.

வறியவர்களுக்கு உதவும் நோக்கில் கிராம சக்தி வாரம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது. எனவே அரசியல் தலைமைத்துவங்களும் அரசாங்க ஊழியர்களும் கிராம சக்தியின் பயன் கிராம மக்களை சென்றடைய வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

வறுமை ஒழிப்பு திட்டங்களை கடந்த 50 வருடகாலமாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மேற்கொண்டன.

எனினும் கிராம சக்தி திட்டம் வறிய மக்களை நேரடியாக இலக்கு வைத்து உருவாக்கப்பட்டதாகும் என்றும் இந்த திட்டத்தில் அக்கறை காட்டுமாறு கிராமப்புற வறிய மக்களை தைரியப்படுத்த முடிந்தால் இலக்குகளை எட்டலாம் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (7)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நிலுவையை இல்லாது செய்ய முயற்சி

## இ.தொ.கா.குற்றச்சாட்டு


(அட்டன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபாய் மேலதிக கொடுப்பனவை பெற்றுக் கொடுத்ததன் மூலம், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிலுவைக் கொடுப்பனவை இல்லாது செய்ய முயற்சிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குற்றம் சுமத்தியுள்ளது.

அட்டனில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 2500 ரூபா கொடுப்பனவு ஒன்றை இரண்டு மாத காலப்பகுதிக்கு மாத்திரம் பெற்றுக்கொடுத்து, கடந்த முறை 88 ஆயிரம் ரூபா நிலுவைப் பணத்தை இல்லாமல் செய்ததைப் போல, இந்த முறை 50 ரூபாவை பெற்றுக் கொடுத்தவர்கள் தொழிலாளர்களுக்கு கிடைக்க இருக்கின்ற நிலுவைப் பணத்தை இல்லாமல் செய்ய முயற்சிக்கின்றனர்.

இருப்பினும் தோட்டத் தொழிலாளர்களின் நிலுவைப் பணத்தினை உரியவர்களிடம் கலந்துரையாடி எந்த முறையிலாவது பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோ கணேசனை தொடர்பு கொண்டு வினவியபோது, தாங்கள் பெற்றுக் கொடுத்த 50 ரூபாய் மேலதிக கொடுப்பனவுக்கும் நிலுவைக் கொடுப்பனவுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று குறிப்பிட்டார். (7)

# இயக்க சக்தியில் இயங்கும் வாள்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

பாவனையிலுள்ள இயக்க சக்தியில் இயங்கும் சகல வாள்களையும் பதிவு செய்யும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பமாவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, அரச, தனியார் பிரிவில் நிறுவன ரீதியாகவும் தனிப்பட்டவர்களின் பயன்பாட்டுக்காகவும் வைத்துள்ள இயங்கு சக்தியில் செயற்படும் சகல வாள்களையும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பதிவு செய்து கொள்ளுமாறு பாவனையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இந்த சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த புதிய நடவடிக்கையினால், சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் காடழிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 28 ஆம் திகதி நிறைவடையவுள்ளதாகவும் பதிவு செய்பவர்களுக்கு அனுமதிப் பத்திரம் ஒன்றும் இலக்கத் தகடு ஒன்றும் வழங்கப்படும் எனவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (7)

# நாட்டில் வரட்சியால் மக்கள் பாதிப்பு

நாட்டின் சில பகுதிகளில் வரட்சியான வானிலை நிலவுவதையிட்டு, மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனரென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.


கேகாலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் வரட்சி கூடுதலாக காணப்படுவதாகவும் குறித்த மாவட்டங்களில் 2,392 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரெனவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கேகாலை மாவட்டத்தின் கலிகமுவ, தெரணியகல, புளத்கோபிட்டிய மற்றும் ருவன்வெல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 372 குடும்பங்களைச் சேர்ந்த 1,519 பேர் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, புத்தளம் மாவட்டத்தின் தங்கொட்டுவ, ஆராச்சிகட்டுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 239 குடும்பங்களைச் சேர்ந்த 873 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான குடிநீரை, பவுசர்கள் மூலம் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (7)

# குறை'களை' பதிகம் 21

## மணல்... போமிட்டா... பினாமியா...



பொன்னோடும் புகழோடும்
கோலோச்சி வாழ்பவனும்
அன்றாடக் காட்சியாய்
அரைவயிறு கஞ்சிக்கு
மாடாய் உழைப்போனும்
இறுதியில் என்னவோ
ஆறடி மண்ணுக்குள்ளே
அடங்கியே போய்விடுவான்

பிறப்பதிலிருந்து
இறப்புவரை-மனிதனுக்கு
மண்தான்... மண்தான்...
மண்ணாய்ப்போன மண்தான்

எட்டு இலட்சம் பத்து இலட்சம்
புது வீட்டுத்திட்டமென்று
அத்திபாரத்தை வெட்டிக்காட்டு
அரைச்சுவர் கட்டிக்காட்டு
கோப்பிசத்தைப் போட்டுக்காட்டு
கோதாரி!
ஏழைவயிறு பற்றியெரிகிறது

அதிலும் பாலியாறு, கண்டாவளை,
நாகர்கோவில், மண்கும்பான் - என்று
மண்ணாய்ப்போன மண்ணுக்காய்
மனிதன் மாடாய் ஓடுகிறான்...

வீட்டுக்கனவை நினைவாக்க
ஏழை மண்ணுக்காய் படும்பாட்டை
அதிகாரிகள் அறிவாரோ - இல்லை
அரசாங்கம்தான் அறிந்திடுமோ?

அறுவார் அறுவார் என்று சனம்
அள்ளித்திட்டுவதும் மண்தான்...

மண்ணாய்ப்போன மண்ணுக்காய்
மனிதன் படும்பாட்டை
அறிவாரோ அறிவாரோ
அதிகாரிகள் அறிவாரோ?

போலிகளைத் தவிர்த்து
பினாமிகளை ஒதுக்கி
ஏழை வீட்டுக்கனவதை
நனவாக்கிட- வருமோ
போமிட் வருமோ?
புதுவாழ்வு பெறுமோ
புதுமனைப் புகுவிழா நடந்திடுமோ?

மாவை. நா. கஜேந்திரன்

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை'பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# தரம் ஒன்று மாணவர்களுக்கான இலவச சீருடைக் கூப்பன் மார்ச்சில்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தரம் ஒன்றுக்கு புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான இலவச சீருடை கூப்பன்கள் மார்ச் மாதம் ஆரம்பத்தில் விநியோகிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வருடத்தின் ஜனவரி மாதத்தில் அரச பாடசாலைகளுக்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்துக் கொள்வதில் சிக்கல் நிலைமை காணப்படுவதனால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது. (7)

# இராகு-கேது பெயர்ச்சி - 2019

## 13.02.2019 – 31.08.2020

பெப்ரவரி 13 ஆம் திததி இராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கிறது. இராகு பகவான், உங்கள் இராசிக்குப் பத்தாமிடம் எனப்படும் தொழில் ஸ்தானத்திற்கு வரப்போகிறார். எனவே தொழில் வளர்ச்சியும் தொகை வரவில் பெருக்கமும் ஏற்படப் போகிறது. அதேபோல் இதுவரை உங்கள் இராசிக்கு பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த கேது, 4 ஆம் இடத்திற்கு வருகிறார்.

தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இராகு பகவான், புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்திலும் பிறகு திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும் மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்திலுமாக சுமார் 1 1/2 ஆண்டு காலங்கள் சஞ்சரிப்பார். அதேபோல கேதுபகவான் உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய் சாரத்திலும் பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்திலும் மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும் சஞ்சரிக்கப் போகிறார்.

இந்த நட்சத்திரப் பாதசார அடிப்படையிலும் குருப்பெயர்ச்சி மற்றும் குருவின் அதிசார காலம், சனியின் வக்கிர இயக்க காலத்திற்கு ஏற்பவும் சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலனின் படியும் உங்களுக்கு உரிய பலன்கள் நடைபெறும்.

**தொழில் வழங்கும் 10 ஆம் இடத்து இராகு!**

**வெற்றிதரும்4ஆம்இடத்துகேது!**

இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு, இப்பொழுது 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு வருகிறார். பின்னோக்கிச் செல்லும் இந்த இராகு தான் உங்கள் வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்ல வழிவகுக்கப் போகிறார். தொழில் தொடங்கும் முயற்சியில் இருந்த தொல்லைகள் அகலும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் உன்னதமான நேரம் கைகூடி வரும். நன்மைகள் அதிகம் நடக்கும். கவலை என்ற மூன்றெழுத்து உங்கள் அகராதியில் இருந்து விலகப் போகிறது. தொழில் புரிய நினைப்பவர்களுக்கு வங்கிகளின் கடன் உதவி கிடைக்கும். இதுவரை தொழில் நடத்திக் கொண்டிருப்பவர்கள், புதிய பணியாளர்களைச் சேர்க்க முன்வருவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வந்து சேரும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். ஒரு சிலருக்கு பணி நிரந்தரமாகும். அரசு வழி சலுகையில், அரசாங்க வேலையும் சிலருக்கு வாய்க்கும்.

4 ஆம் இடமான சுக ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கும் கேதுவால் அடிக்கடி ஆரோக்கிய தொல்லை ஏற்படுத்துமோ என்று தோன்றலாம். ஆனால் அவர் இருப்பது குரு வீடு என்பதால், பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படாது. அதே நேரத்தில் சனியோடு கேது இருப்பதால் ஆரோக்கியத்தில் சிறு அச்சுறுத்தல் ஏற்படத்தான் செய்யும். வீண் விரயங்கள் ஏற்படாமல் இருக்க, சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள். சொந்த வீட்டில் குடியேற வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு அந்த எண்ணம் நிறைவேறலாம். இல்லத்தில் சுப காரியங்கள் செய்வதில் கவனம் செலுத்துங்கள். ஆலயத் திருப்பணிகள் செய்வதிலும் நாட்டம் செலுத்துவீர்கள். கேதுவால் சுகக் கேடுகள் ஏற்படாமல் இருக்கவும் துயரங்களை வெளியேற்றவும் குலதெய்வ வழிபாடு மற்றும் இஷ்ட தெய்வ வழிபாடுகளைச் செய்யுங்கள்.

இராகு-கேது சஞ்சாரத்திற்கு இடையில், 13.3.2019 முதல் 17.5.2019 வரையான காலகட்டத்தில் குரு பகவான், அதிசார கதியில் தனுசு இராசிக்குச் செல்கிறார். அப்போது அதன் பார்வை 10 ஆம் இடத்தில் பதிகின்றது. குரு பார்வை பெறும் அந்த சில காலமும் உங்களுக்கு பெரிய முன்னேற்றம் வரக்கூடும். இருப்பினும் உங்கள் சுயஜாதகத்தை ஒருமுறை ஆராய்ந்து தசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால் கூடுதல் வளர்ச்சி காண இயலும்.

**குரு சாரத்தில் இராகு சஞ்சாரம்**
**(13.2.2019 முதல்19.8.2019 வரை)**

## பத்தில் வரும் இராகுவால் பணியில் தொய்வு அகலும்

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, நல்ல பலன்களையே அள்ளி வழங்குவார். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். உதாசீனப்படுத்திய உறவினர்கள்ஓடிவந்து ஒட்டிக்கொள்வார்கள். குரு பகவான் உங்கள் இராசிக்கு 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதி என்பதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடி வரும். தாய், தந்தை வழி ஒத்துழைப்பு கிடைக்கும். தடையாக இருந்த திருமண வாய்ப்புகள் கைகூடும்.

**சுய சாரத்தில் இராகு சஞ்சாரம்**
**(20.8.2019 முதல்27.4.2020 வரை)**

திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். எப்பொழுதோ கொடுத்து நிலுவையில் இருந்த தொகை, இப்பொழுது கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் கொஞ்சம் குழப்பம் ஏற்படலாம். எனவே குடும்பத்தில் உள்ளவர்களிடம் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். பெரிய முதலீடுகளைச் செய்ய நினைக்கும் காரியங்களை யோசித்துச் செய்யுங்கள்.

**செவ்வாய்சாரத்தில்இராகுசஞ்சாரம்**
**(28.4.2020 முதல்31.8.2020 வரை)**

மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. கொடுக்கல்- வாங்கல்களில் ஒரு சிலர் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பிறருக்கு நன்மை செய்யப்போய் அது தீமையாக முடியலாம். வாங்கிய பூமியில் பிரச்சினைகளும் வளர்ச்சியில் சில இடையூறுகளும் ஏற்படும். சகோதரர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம். வழக்குகள் திசைமாறலாம். இக்காலத்தில் வழிபாடுகளே உங்களுக்கு துணை.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம்**
**(13.2.2019 முதல்16.4.2019 வரை)**

உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகத் தான் இருக்கும். எவ்வளவு தொகை வரவாக வந்தாலும் செலவுகளை சமன் செய்ய முடியாது. மாதக் கடைசியில் பற்றாக்குறையைத் தான் சந்திப்பீர்கள். இடமாற்றம், வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் ஒருசிலருக்கு ஏற்படலாம். உத்தியோக மாற்றங்களை தவிர்க்க முடியாமல், ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். வீடு கட்டும் முயற்சியில் கொஞ்சம் தடை ஏற்பட்டு அகலும். உடல்நலத்தில் கவனம் தேவை. மூத்த சகோதரர்களால் இடையூறுகள் ஏற்படாதிருக்க அனுசரித்துச் செல்வது நல்லது.

**சுக்கிர சாரத்தில் கேது சஞ்சாரம்**
**(17.4.2019 முதல்23.12.2019 வரை)**

பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பண வரவு திருப்திகரமாக இருக்கும். மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும். வரன்கள் வாயில் தேடி வந்து கொண்டேயிருக்கும். உற்றார், உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி அடைவீர்கள். தொழிலில் எதிர்பார்த்தபடியே இலாபம் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும் விதத்தில் அமையும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டு, புதிய வாகனம் வாங்க முன்வருவீர்கள். சொத்து வாங்கும் போது, யார் பெயரில் வாங்கலாம் என்று ஆராய்ந்து வாங்குவது நல்லது. உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம்**
**(24.12.2019 முதல்31.8.2020 வரை)**

மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பழைய கடனை அடைக்கப் புதிய கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம்.

வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும்.





தொழிலில் எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயரதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நன்மையை வழங்கும்.

அஜீரணக் கோளாறுகளால் அவதி ஏற்படாமல் இருக்க, உணவுக் கட்டுப்பாடு தேவை.

**வழிபாடு**

பத்தாம் இடத்து ராகுவால் தொழில் வளம் சிறக்கவும் சுகஸ்தான கேதுவால் ஆரோக்கியம் சீராகவும் பாம்புக் கிரகத்திற்குரிய சிறப்பு வழிபாடுகளை அனுகூல நாளில் செய்வதோடு, வயதுக்



கேற்ற வீதம் ஸ்ரீராமஜெயம் எழுதுங்கள். அனுமன் பதிகம் பாடி அனுமனை வழிபடுவதும் நன்மையைத் தரும்.

**கவனம் தேவைப்படும் காலம்**

இராகு-கேது பெயர்ச்சி வர இருக்கிறது. மகரத்தில் சஞ்சரித்து வந்த கேது, இந்தப் பெயர்ச்சியின் மூலமாக தனுசு இராசிக்கு வருகிறார். அங்கு சனியோடு இணைந்து சஞ்சாரம் செய்கிறார்.

அப்படி அவர்கள் இணைந்து சஞ்சரிக்கும் வேளையில், 8.5.2019 முதல் 3.9.2019 வரை சனி பகவான் வக்கிரம் அடைகிறார்.

இதுபோன்ற காலத்தில் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது அவசியமாகும்.

கடன் சுமை அதிகரித்துக் கொண்டே செல்லும். பிறருக்கு பொறுப்புகள் சொல்வதன் மூலமும் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டியதிருக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

உறவினர்களிடம் வாக்கு வாதம் செய்யாமல் இருப்பது, உறவினர்களுக்கிடையே விரிசல் ஏற்படுத்தாமல் இருக்கும் இந்தக் கால கட்டத்தில் குலதெய்வ வழிபாடும், கூடுதலான சிறப்பு வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இராகு - கேது பெயர்ச்சியின் விளைவாக குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். மனச் சஞ்சலங்கள் அகலும். மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை குறையும். வீட்டில் சுப காரியங்கள் நடைபெறவில்லையே என்ற கவலை அகலும்.

கல்யாண முயற்சி கைகூடும். கணவனின் அன்பிற்கு பாத்திரமாக விளங்குவீர்கள். தாய் மற்றும் சகோதர வழியில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும்.

உங்கள் உடல் நலத்திலும் தாயின் உடல்நலத்திலும் சிறுசிறு பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். நட்பால் நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். வீடுகட்ட, வாகனம் வாங்க கடன் உதவி கிடைக்கும் என்றாலும், கடன் சுமை அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. 4 இல் கேது இருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. அனுமன் வழிபாடும் நாகசாந்திப் பரிகாரமும் நன்மையை வழங்கும். (தொடரும்)

# வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றம்

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதிகளில் எதிர்வரும் மார்ச் மாதம் 70 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மக்கள் கடந்த 2009 ஆம்ஆண்டு நவம்பர்மாதம் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட நிலையில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி,பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

இருந்த போதும், கடந்த 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் கடந்த 19 வருடங்களுக்கு மேலாக மீள்குடியேற முடியாத நிலையில் வெளி மாவட்டங்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த பிரதேசத்தில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படுவதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக தாங்கள் மீள்குடியேற முடியாத நிலையில் உள்ளதாகவும் விரைவாக வெடிபொருட்களை அகற்றி தங்களை மீள்குடியேற்றுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டு வினவிய போது,

முகமாலை, இந்திரா புரம், வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் தற்போது வெடி பொருட்கள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் ஒரு பகுதி காணிகளில் வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. இவ்வாறு வெடி பொருட்கள் அகற்றப்பட்ட காணிகளில் எதிர்வரும் மார்ச்மாதம் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கென 70 குடும்பங்கள் வரையில் தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்று குறிப்பிட்ட அவர், முகமாலை, வேம்பொடு கேணி, இந்திராபுரம் ஆகிய பகுதிகளில் மீள்குடியேறுவதற்காக இதுவரை 286 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர். (7-315)



# நிர்வாகத்தெரிவும் பொதுக்கூட்டமும்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளன நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா - ரவிகரன், திருமதி.கே.சரோஜா (உதவிப் பணிப்பாளர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்), ம.சசிக்குமார் (முல்லைத் தீவு மாவட்ட இளைஞர்சேவை அதிகாரி), சி.சதீஸ்குமார் (இளைஞர் சேவை அதிகாரி கரைதுறைப்பற்று), த.இரதீசன் (இளைஞர்சேவை அதிகாரி கரைதுறைப்பற்று) ஆகியோர் கலந்து கொண்டனர். (7-281)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பான கலந்துரையாடல்





(பனிக்கன்குளம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இடம் பெற்றுள்ளது.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது முள்ளி வாய்க்கால் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சிறுவர்கள் உள்ளிட்ட அப்பாவி பொதுமக்களுக்கு எதிர் வரும் மே 18 ஆம் திகதி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

குறித்த அஞ்சலி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்றே முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம் பெற்றுள்ளது. (7-281)

# பெக்கோவுடன் மோதி இளைஞன் பலி





(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி, 2 ஆம் கட்டை பகுதியிலுள்ள புதிய குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் பெரிய கரிசல் கிராமத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பெரிய கரிசல் கிராமத்தைச் சேர்ந்த முஹம்மது ஜே.ரமீஸ் (வயது-23) என அடையாளம்காணப் பட்டுள்ளார்.

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி , 2 ஆம் கட்டை பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நீர்க்குழாய் இணைப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில், மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி 2 ஆம் கட்டை பகுதியில் குடியிருப்பு பகுதியில் வைத்து நேற்று மாலை 4.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த பெரிய கரிசல் கிராமத்தைச் சேர்ந்த 23 வயது மதிக்கத்தக்க முஹம்மது ஜே.ரமீஸ் என்பவர் பெக்கோ (ஜே.சி.பி) ரக வாகனத்தில் மோதி விபத்திற்குள்ளானார் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் குறித்த இளைஞர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து இடம் பெற்ற விதம் தொடர்பில் உண்மை விபரங்கள் வெளியாகவில்லை.

மன்னார் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்த நிலையில் குறித்த பெக்கோ (ஜே. சி.பி) வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-285)

# மன்னார் மனித எலும்புக்கூடுகளின் விவகாரம்; காபன் பரிசோதனை அறிக்கை இன்று சமர்ப்பிப்பு




(மன்னார்)

மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்களின் காபன் பரிசோதனை அறிக்கை இன்று புதன்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

மனித எச்சங்களின் காபன் பரிசோதனை அறிக்கை கடந்த 16 ஆம் திகதி அதிகாலை அகழ்வுப் பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ பீட்டா இணையத் தளத்தில் பிரவேசித்து ஆய்வறிக்கை பெற்றுக் கொண்டுள்ளார்.

மனித எச்சங்களின் 6 மாதிரிகள் மீதான காபன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அவற்றில் 5 மாதிரிகளின் அறிக்கைகள் கடந்த சனிக்கிழமை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

எனினும் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளதை உறுதிப் படுத்திய சட்டவைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ குறித்த அறிக்கையில் என்ன விடயங்கள் குறிப்பிடப் பட்டுள்ளது? என்பது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க மறுத்து விட்டார்.

எனினும் குறித்த காபன் பரிசோதனை அறிக்கை இன்று புதன்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகள் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா ஆய்வுக் கூடத்தில் காபன் பரிசோதனைக்காக கடந்த மாதம் 25 ஆம் திகதி, கையளிக்கப்பட்டதோடு, குறித்த மனித புதைகுழியில் தொடர்ச்சியாகவும் மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது வரை 146 நாட்கள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது 323 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றில் 314 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் 28 சிறுவர்களுடையது என்பது குறிப்பிடத்தக்கது. (7-285)

# அந்தோனியார் ஆலயத் திருவிழா

(பூநகரி)

பூநகரி கிளிநொச்சி மாவட்டத்தின் மண்டைக் கல்லாறு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நாளை மறுதினம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். மறுநாள் சனிக்கிழமை 4.30 மணியளவில் நற்கருணை ஆராதனையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் திருநாள் திருப்பலியும் திருச்சுரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம் பெறும். (7-107)

# நெல் உலரவிடும் தளங்களின்மை; விவசாயிகள் பெரும் சிரமம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு, முள்ளியவளை மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய பகுதிகளில் போதியளவு நெல் உலரவிடும்தளங்கள் இன்மையால் விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லை பெரும் சிரமங்களின் மத்தியில் வீதியில் உலர விட வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு,முள்ளியவளை, கள்ளிக்காடு, ஒட்டுசுட்டான்,மன்னாகண்டல், கூழாமுறிப்பு போன்ற இடங்களில் தற்போது காலபோக அறுவடைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லை உலர விடும் தளங்கள் போதுமானதாக இல்லை என்றும் குறிப்பிட்ட சில பகுதிகளில் நெல் உலரவிடும் தளங்கள் இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

இதனால் தற்போது அறுவடை செய்யும் நெல்லுக்கான உரிய விலையின்மையாலும் விவசாயிகள் தமது நெல்லை உலர வைத்து பராமரிக்க வேண்டிய நிலையில் அறுவடை செய்யும் நெல்லை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வீதியின் ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு பகுதியில் இருந்து முள்ளியவளை வரையான பகுதிகளில் உலரவிட்டு வருகின்றனர். (7-315)

# லொறி மோதி விபத்து 13 பேர் உயிரிழப்பு

## 15 பேர் படுகாயம்



(பிரதாப்கர்)

ராஜஸ்தானில் திருமண ஊர்வலம் சென்று கொண்டிருந்த போது, லொறி மோதியதில் 13 பேர் பலியாகினர். மேலும் 15 பேர் படுகாயமடைந்தனர்.

ராஜஸ்தான் மாநிலத்தின் பிரதாப்நகர் -ஜெய்ப்பூர் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் இரவு திருமண ஊர்வலம் நடைபெற்றது. மணமகள் மற்றும் உறவினர்கள் என ஏராளமானோர் ஊர்வலமாக வந்துகொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த ஒரு லொறி, கட்டுப்பாட்டை இழந்து ஊர்வலத்திற்குள் புகுந்தது. இதில் 9 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 4 பேர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணித்தனர். மணமகள் உட்பட 15 பேர் படுகாயம் அடைந்தனர். படுகாயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது குறித்த தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(4)

# பேருந்து குடைசாய்

# 22 பேர் பரிதாபமா

(பொலிவியா)

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் இடம்பெற்ற விபத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்தமையினாலேயே நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை பூபோ ஏரிக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.




இதன்போது காயமடைந்தவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது...

விபத்

## 1400 கோடி ஊழல் வழக்கு

# நவாஸின் சகோதரர் குற்றவாளி பாகிஸ்தான் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ரூ. ஆயிரத்து 400 கோடி ஊழல் வழக்கில் நவாஸ் ஷெரீபபின் சகோதரர் ஷாபாஸ் ஷெரீப் குற்றவாளி என அந்நாட்டு நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு அளித்தது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் இளைய சகோதரர் ஷாபாஸ் ஷெரீப் (வயது 67). 'பனாமா கேட்' ஊழல் வழக்கில் நவாஸ் ஷெரீப்புக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதை தொடர்ந்து, ஷாபாஸ் ஷெரீப் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். அத்துடன் அவர் பாகிஸ்தான் நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவராகவும் உள்ளார்.

இந்த நிலையில் ஷாபாஸ் ஷெரீப் பஞ்சாப் மாகாண முதலமைச்சர் பதவி வகித்தபோது, ஆசியானா வீட்டு வசதித் திட்டத்தில், ரூ.ஆயிரத்து 400 கோடி ஊழலில் ஈடுபட்டதாக புகார் எழுந்தது.

அதேபோல் ரூ.400 கோடி மதிப்பிலான பஞ்சாப் சாப் சானி ஊழலில் ஈடுபட்டதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இதையடுத்து, மேற்கூறிய 2 ஊழல் புகார்கள் தொடர்பாக ஷாபாஸ் ஷெரீப் மீது அந்நாட்டு தேசிய பொறுப்புடைமை முகமை (லஞ்ச ஒழிப்பு பொலிஸார்) வழக்குப்பதிவு செய்தது.

ஷாபாஸ் ஷெரீப் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து வந்த நிலையில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் அவர் அதிரடியாக கைதுசெய்யப்பட்டார். அதனை தொடர்ந்து அவர் லாகூரில் உள்ள மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் லாகூரில் உள்ள தேசிய பொறுப்புடைமை நீதிமன்றில், ஆசியானா வீட்டு வசதி ஊழல் வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. நீதிபதி சையத் நஜாமுல் ஹாசன் வழக்கை விசாரித்தார்.

ஷாபாஸ் ஷெரீப் மற்றும் இந்த வழக்கில் தொடர்புடைய மேலும் 9 பேர் நீதிபதி முன்பு ஆஜர்படுத்தப்பட்டனர். தேசிய பொறுப்புடைமை முகமை சார்பில் ஆஜரான சட்டத்தரணி அலி ஜான் ஜீவா, ஷாபாஸ்ஷெரீப் உள்ளிட்ட 10 பேர் மீதான குற்றச்சாட்டுக்குரிய ஆதாரங்களை நீதிபதியிடம் சமர்ப்பித்தார்.

ஷாபாஸ் ஷெரீப் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடம் இன்றி நிரூபிக்கப்பட்டதால் அவரை குற்றவாளி என நீதிபதி அறிவித்தது.

அதனை தொடர்ந்து தண்டனை விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என கூறி திகதி குறிப்பிடாமல் வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார். அப்போது ஷாபாஸ் ஷெரீப்பின் சட்டத்தரணி, தனது கட்சிக்காரருக்கு உடல் நிலை சரி இல்லாததால், அவருக்கு ஓய்வு தேவைப்படுகிறது என்றும், எனவே தண்டனை அறிவிப்பை ஒரு வாரத்துக்கு தள்ளிப் போட வேண்டும் என்றும் நீதிபதியிடம் கோரிக்கை விடுத்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## புல்வாமா தாக்குதல் வி

# பாகிஸ்தான் படையிட வெடி மருந்துகள் கொ

## தடயவியல் நிபுணர்க

(புல்வாமா)

புல்வாமா தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட ஆர்.டி.எக்ஸ் வெடிபொருட்கள் பாகிஸ்தான் பாதுகாப்பு படையினரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாக தடயவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவையே பெரும் சோகத்திற்கு உள்ளாக்கிய சி.ஆர்.பி.எஸ் வீரர்களை இலக்கு வைத்து தற் கொலை



தாக்குதல் நடத்தப்பட்ட புல்வாமா பகுதியி

# அமெரிக்காவில் து 4 பேர் பரிதாபமா

(சிக்காகோ)

அமெரிக்காவில் மிசிகன் மாகாணத்தில் பூட்டிய வீட்டுக்குள் ஒரு பெண் மற்றும் 3 குழந்தைகள் சுட்டுக்கொல்லப்பட்டது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்காவில் மிசிகன் மாகாணத்தில் சோலன் டவுன் ஷிப் பகுதியில் பூட்டிய வீட்டுக்குள் ஒரு பெண் மற்றும் 3 குழந்தைகள் பிணமாக கிடந்தனர். தகவல் அறிந்ததும் பொலிஸார் விரைந்து வந்து பார்த்த னர். அ கியால் இருந்த கொல்ல பட்டது.

ஆ யார்?

# தொழிலாளர் கட்சியிலிருந்து ஏழு எம்.பி.க்கள் திடீர் விலகல்



(பிரித்தானியா)

பிரெக்சிட் விவகாரத்தில் முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த 7 எம்.பிக்கள் திடீரென கட்சியில் இருந்து விலகியுள்ளனர்.

பிரெக்சிட் விவகாரம் மற்றும் யூதர்களுக்கு எதிரான பாகுபாடு ஆகிய விவகாரங்களில் தொழிலாளர் கட்சி தலைவர் ஜெரிமி கார்பின் செயற்பாடுகளில் தங்களுக்கு உடன்பாடு இல்லை என்பதை தெரிவித்தே இவர்கள் கட்சியிலிருந்து விலகியுள்ளனர்.

அத்துடன் இவர்கள் இனி அணியாக செயற்பட தீர்மானித்துள்ளதுடன், தொழிலாளர் கட்சி மற்றும் பிற கட்சிகளின் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். புதிய அரசியல் கட்சியை தொடங்குவதற்காக தங்களுடன் இணையும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதையடுத்து, தொழிலாளர் கட்சியில் இருந்து மேலும் சில எம்.பி.க்கள் வெளியேறலாம் என தெரிகிறது. யூத விரோத பிரச்சினையை சரிசெய்யாவிட்டால், ஏற்கனவே விலகிய 7 முன்னாள் எம்.பிக்களுடன் இணைய விரும்புவது குறித்து யோசித்து வருவதாக இரண்டு எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.

முக்கிய எம்.பிக்கள் விலகியிருப்பது தொழிலாளர் கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# மெக்சிக்கோ சுவ ட்ரம்புக்கு எதிராக வ

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தேசிய அளவிலான அவசரகால நிலையை பிரகடனம் செய்ததற்கு எதிராக நியூயோர்க் உள்ளிட்ட 16 மாகாணங்கள் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளன.

அமெரிக்கவில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பல்வேறு சமூக அமைப்புகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்ட போதும் ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுப்புச்சுவர் அமைப்பதில் ட்ரம்ப் உறுதியாக இருந்தார்.

இதற்கான நிதியை ஒதுக்க எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி எதிர்ப்பை வெளியிட்டது. மெக்சிக்கோ எல்லையில் தடுப்புச்சுவர் எழுப்பும் விவகாரத்தில் ட்ரம்புக்கும், ஜனநாயக கட்சிக்கும் சமரசம் ஏற்பட வில்லை உள்நா அரச து கிடைக முடங்க

அ தடுப்புச் மன்றப் நாட்டி அறிவி ஜனாதி தெரிவி

# வெளிநாடு

## சாய்ந்து விபத்து;
## மாக உயிரிழப்பு

### லர் படுகாயம்



கின்றது.

விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் துணிகளால் மூடப்பட்டி ருந்த நிலையில், மீட்புப்படையினர் அவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற பூபோ ஏரிக்கு அருகில் தற்போது மீட்புப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில் விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4)

### விவகாரம்

## பிடமிருந்து
## கொள்முதல்

### ணர்கள் தெரிவிப்பு



பகுதியில் தடயவியல் நிபுணர்கள் ஆய்வுகளை நடத்தி வருகின்றனர்.

40 சி.ஆர்.பி.எஸ்.வீரர்கள் உயிரிழப்பிற்கு காரணமான புல்வாமா தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட ஆர்.டி.எக்ஸ். வெடிபொருட்கள் இராணுவத்தில் பயன்படுத்தப்படுபவை என்றும், ஒரு மாதத்திற்கு முன்பே அது இந்தியாவிற்கு கொண்டுவரப் பட்டிருக்கலாம் என்றும், நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே ஜெய் ஷ் மூகமது அமைப்பைச் சேர்ந்த தற்கொலைத் தாக் குதல் தீவிரவாதிகள் 21பேர், கடந்த வருடம் டிசெம்பர் மாதமே, ஜம்மு காஷ்மீருக்குள் ஊடுருவியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## துப்பாக்கிச்சூடு
## மாக உயிரிழப்பு

னர். அவர்களது உடலில் துப்பாக்கியால் சுடப்பட்ட குண்டுக்காயங்கள் இருந்தன. எனவே இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டது.

ஆனால் அவர்களை சுட்டது யார்? எதற்காக இக்கொலை நடந்தது? எனத் தெரியவில்லை. அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கமராக்களில் பதிவான வீடியோ மூலம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## வர் விவகாரம்;
## வழக்குத்தாக்கல்

வில்லை. இதனால், வெளியுறவு, உள்நாட்டு பாதுகாப்பு உள்ளிட்ட 9 அரச துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு கிடைக்காமல் அந்த துறைகள் முடங்கின.

அமெரிக்கா - மெக்சிக்கோ இடையே தடுப்புச்சுவரை கட்டுவதற்கு நாடாளு மன்றம் ஒப்புதல் அளிக்காவிட்டால் நாட்டில் அவசரகால நிலையை அறிவிப்பேன் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முன்னதாகத் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில், நாட்டில் அவசரகால நிலையை ட்ரம்ப் பிறப்பித்துள்ளார்.

இதனையடுத்து சட்ட நடவடிக்கை மூலம் அவசர கால நிலையை முடிவுக்கு கொண்டுவர சான்பிரான் சிஸ்கோ நீதிமன்றத்தில் குறித்த மாகாணங்களால் வழக்குகள் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## ஏமனில் போர் நிறுத்தத்துக்கு இரு தரப்பும் ஒப்புதல்

### ஐ.நா. தெரிவிப்பு



(ஜெனிவா)

ஏமன் அரசும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும் போர் நிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஏமனில் நடந்து வரும் உள்நாட்டு போரை நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை நீண்டகாலமாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. பலமுறை போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு அரசு மற்றும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஒப்புக் கொண்டு அது தோல்வியில் முடிந்துள்ளது. இந்த நிலையில் மீண்டும் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு அரசும், ஹவுதி கிளர்ச்சியாளர்களும் மீண்டும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபை," இரண்டு நாள் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பிறகு போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஹோடேடாஹ் பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஏமன் அரசு மற்றும் ஹவுத்தி கிளர்சியாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து இப் பகுதியில் உணவு மற்றும் மருத்துவ வசதி தேவைப்படும் மக்களுக்கு வேண்டிய உதவிகள் சேரும் என்று நம்புகிறோம். போர் நிறுத்தம் படிப்படியாக அமுல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என தெரிவித்துள்ளது.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015 மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயற்படுகிறது. ஹவுதி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

சவுதி அரேபியா தொடர்ந்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது குறிவைத்து ஏமனில் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானோ கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

இப்போரில் இதுவரை 11,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 5,000 பேர் குழந்தைகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## அமெரிக்கா-தலிபானுக்கிடையில் புதிய பேச்சுவார்த்தை



(இஸ்லாமாபாத்)

அமெரிக்க அதிகாரிகள் மற்றும் தலிபான் பிரதிநிதிகளுக்கிடையே புதிய பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இந்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன.

குறித்த பேச்சுவார்த்தையில் ஆப்கானிஸ்தானில் நிலவும் அசாதாரண நிலைக்கு தீர்வு காண்பது மற்றும் அமெரிக்க படைகளை ஆப்கானிஸ்தானிலிருந்து திரும்ப பெறுவது உள்ளிட்டவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிராக மோதலில் ஈடுபட்டுவரும் அமெரிக்கா, அங்கு அமைதியை ஏற்படுத்தும் விதமாக தலிபான்களுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது. இந்த நடவடிக்கைக்கு தலிபான்களும் சம்மதித்தனர்.

அதன்படி கடந்த மாதம் இறுதியில் கட்டார் தலைநகர் டோகாவில் இந்த பேச்சுவார்த்தை இடம்பெற்றிருந்தது.

இந்த பேச்சுவார்த்தையின்போது ஆப்கான் விவகாரத்தில் தீர்வு காண ஒரு ஒப்பந்தத்தை கட்டமைக்க இரு தரப்பும் ஒப்புதல் அளித்ததோடு, குறிப்பிடத்தக்க வகையில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## 2 ஆயிரம் பாகிஸ்தான் கைதிகளை உடனே விடுதலை செய்ய வேண்டும்

### சவுதி இளவரசர் வலியுறுத்து

(ரியாத்)

சவுதி அரேபியாவில் சிறைகளிலுள்ள 2 ஆயிரத்துக்கும் அதிகமான பாகிஸ்தான் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய சவுதி இளவரசர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

சவுதியின் முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மானின் பாகிஸ்தான் விஜயத்தையடுத்தே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சவுதி அரேபியா இளவர்சர் முஹம்மது பின் சல்மானுடன் நேற்று முன்தினம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் சந்தித்து பேசினார்.

இதன்போது, சவுதி சிறைகளில் உள்ள பாகிஸ்தான் கைதிகளை கருணை அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை சவுதி இளவரசரிடம் அவர் விடுத்தார்.



அத்துடன் ஏழைத் தொழிலாளர்களாக சவுதிக்கு சென்ற இவர்களின் குடும்பத்தினர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களின் வருமானம் கிடைக்காத நிலையில் மிகுந்த சிரமப்பட்டு வருவதாகவும் இம்ரான்கான் சுட்டிக்காட்டினார்.

இதனையேற்ற இளவரசர், சவுதி அரேபிய நாட்டு சிறைகளில் உள்ள 2,107 கைதிகளை கருணை அடிப்படையில் உடனடியாக விடுதலை செய்யுமாறு நேற்று உத்தரவிட்டுள்ளதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் பவாத் சௌத்ரி தெரிவித்தார்.

அத்துடன் மீதமுள்ள கைதிகளின் விடுதலை தொடர்பாக சவுதி அரசு பரிசீலித்து வருவதாகவும் பவாத் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபிய சிறைகளில் பாகிஸ்தானைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரம் பேர் பல்வேறு குற்ற வழக்குகளில் விசாரணைக் கைதிகளாகவும், தண்டனை பெற்ற கைதிகளாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நாளை இந்தியா வரும் சவுதி இளவரசரிடம் இதே கோரிக்கையை இந்திய அரசும் முன்வைக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (4)

# நாட்டில் அரசியல் ரீதியாக தீவிர மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்



## ரவி கருணாநாயக்க கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் அரசியலில் தீவிர மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியாளர்களை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்து கருத்துரைத்த அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்துச் செய்ய வேண்டிய நேரம் இது என தெரிவித்தார்.

71 ஆண்டுகால சுதந்திரத்தை நினைவூட்டுவதால், உண்மையான பொருளாதார சுதந்திரத்தை நாடு அனுபவித்து வருகிறதா? என அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இரத்துச் செய்வோம் என பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (7)



# பொதுஜன பெரமுன தனித்து போட்டியிட்டாலும் வெற்றியடையும்

## பிரசன்ன கூறுகிறார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டு சேராவிடின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வெற்றி பெறமுடியாதென கூறுகின்றவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலில் தனித்துப் போட்டியிட முடியாதவர்களென நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன தேர்தலில் தனித்துப் போட்டியிட்டால் வெற்றியடைய முடியாதென சில கட்சிகள் விமர்சனம் செய்கின்றமை குறித்தே பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுஜன பெரமுனவினால் தனித்து எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றியடைய முடியுமென்பதை நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அனைவரும் உணர்ந்திருப்பார்களெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகையால் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றி பெற்று புதிய அரசாங்கத்தை அமைப்பது உறுதியென பிரசன்ன ரணத்துங்க மேலும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (7)

# வரவு-செலவுத் திட்டம் மக்களை ஏமாற்றும்

## ரோஹித்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கம் 2019 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவு மூலம் மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு சலுகைகள் வழங்குவதற்கு போதுமான நிதி திறைசேரியில் இல்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் முன்மொழியப்பட்டுள்ள 2019 வரவு- செலவுத் திட்டத்தில் அதிகமாக பொய்களே உள்ளன என்பது ஜனாதிபதியின் ஒரு அண்மைய அறிக்கை மூலம் தெளிவாகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு இது ஒரு தேர்தல் ஆண்டு என்பதால், அரசாங்கம் ஒரு பெரிய முன்மொழிவை முன்வைத்து அனைத்தையும் பெற்றுத் தருவதாக சத்தியம் செய்வார்கள் என்றும் இதனால் மக்களே ஏமாற்றமடையப் போகின்றனர் என தெரிவித்த அவர்,

அத்தகைய சூழ்நிலைகளில் தற்போதைய அரசாங்கம் எவ்வாறு தொடர்ந்தும் தனது ஆட்சியை கொண்டு செல்லும் என்பது கேள்விக்குறியே என மேலும் தெரிவித்துள்ளார். (7)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கே தேர்தலை பிற்போடுவதற்கான தேவை உள்ளது



## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே தேர்தலை பிற்போடுவதற்கான தேவை உள்ளது என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரி, பகிரங்கமாக கதைக்கும் சில கட்சிகளின் உறுப்பினர்கள் இந்தத் தேர்தலை பிற்போடுவது நல்லதென்று என்னிடம் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கின்றனர்.

கட்சிகளின் உண்மையான வாக்குப் பலம் வெளிப்படுவதற்கு அவர்கள் விருப்பமின்மையே இவ்வாறு கட்சியின் உறுப்பினர்கள் தெரிவிக்கின்றமைக்கான காரணம்.

1987ஆம் ஆண்டு இந்த மாகாண சபைகளை உருவாக்க எதிர்ப்பையும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்பையும் தெரிவித்தவர்களே இன்று மாகாணசபைத் தேர்தல் குறித்து கூச்சலிடுகின்றார்கள்.

மாகாண சபைத் தேர்தல் மட்டுமல்ல எந்தவொரு தேர்தலுக்கும் தான் தயாரென்றும் தெரிவித்துள்ள அவர், மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கான தேவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லையென்றும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே தேர்தலை பிற்போடுவதற் கான தேவை உள்ளதாகவும்" லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பறக்கும்தட்டு

1947 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24-ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை.

கென்னத் ஆர்னால்டு (Kenneth Arnold) அப்படி என்று சொல்லி ஒரு அமெரிக்க வர்த்தகர். அவர் தன்னுடைய விமானத்திலே பறந்து கொண்டிருந்தார். வோஷிங்டனுக்குப் பக்கத்திலே காஸ் கேட் மலைகள் (Cascade mountains) மேலே அந்த விமானம் பறந்து கொண்டிருக்கின்றது. அப்பொழுதுதான் அவர் ஒரு அதிசயத்தைப் பார்த்தார்.

சுமாராக ஒரு 25 மைல் தூரத்திலே ஒன்பது வட்ட வடிவமான பொருள்கள் ஒரு சாய்வான நேர்கோட்டிலே அணிவகுத்து மிகவும் வேகமாக பறந்து போய்க் கொண்டிருக்கின்றது!

அதேசமயத்திலே ஒரு டகோடா விமானமும் பறந்து கொண்டிருந்தது. ஆர்னால்டு மிகவும் கவனமாகப் பார்த்தார்.

அந்த வட்டங்கள் விமானத்தை விட அளவிலே சின்னதாகத் தெரிந்தது. ஒன்றோடு ஒன்று சங்கிலியாலே இணைத்தது மாதிரித் தெரிந்தது. மலைச் சிகரங்களைத் தாவித் தாண்டி பறந்து போய்விட்டது.

அன்றைய தினத்துக்கு மறுநாள், அமெரிக்கா பூராகவும் பத்திரிகைகளிலே இதுதான் முக்கியமான செய்தி! அந்த மர்மப் பொருளுக்கு பறக்கும் தட்டு அப்படி என்று பேரும் வைத்துவிட்டார்கள்!

மக்கள் எல்லோரும் பார்த்தார்கள்... அவர்கள் சும்மா இருப்பார்களா? உடனே நாங்கள் கூட பறக்கும் தட்டைப் பார்த்தோம்! அப்படி என்று சொல்ல ஆரம்பித்தார்கள்! அது நிஜமா பொய்யா என்று கூடப் பார்க்காமல் பத்திரிகையிலே பரபரப்பாகச் செய்தி போட ஆரம்பித்திட்டார்கள்! இவர் தான் பறக்கும் தட்டைப் பார்த்தவர்; இது தான் பறக்கும் தட்டு! அப்படி என்று! அதன்பின்பு பார்த்தால்...

கனடா , அவுஸ்திரேலியா, இங்கிலாந்து , ஈரான் இப்படி பல நாடுகளிலேயும் பறக்கும் தட்டை பார்த்தால் மக்கள் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்!

நம்ம ஊர்லே மட்டும் சும்மா இருப்பார்களா? இவர்களும் சொல்ல ஆரம்பித்தார்கள்.

"நேற்றைக்கு எங்க ஊர் அம்மன் கோயிலுக்கு நேராக வந்து பறக்கும்தட்டு மூன்று தடவை சுத்திவிட்டுப் போய்விட்டது! என்று நம்ம பேரும் பேப்பரிலே வரனும் என்று சொல்லி நிறையப் பேர் கதைவிட ஆரம்பித்திட்டார்கள். பேப்பர்க்காரங்களுக்கும் இது மாதிரி நியூஸ் தானே தேவை. அதனாலே வரிந்து கட்டிக் கொண்டு அதை வாங்கி போட்டுக் கொண்டிருந்தார்கள்!

அவர் அவர் இஷ்டத்திற்கு அதுக்கு ஒரு உருவம் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

தட்டு மாதிரி இருந்தது என்றார் ஒருவர். தீப்பந்து மாதிரி இருந்தது என்றார் ஒருத்தர்.

கோன் ஐஸ்கிறீம் மாதிரி இருந்தது என்றார் இன்னொருத்தர்.

வடை மாதிரி தெரிந்தது என்றார் இன்னுமொருவர்.

நான் பார்த்தது சுருட்டு மாதிரி இருந்தது என்றார் ஒருத்தர். கொஞ்ச நாளைக்கு பிறகு...

மாவுரி (Maury) தீவிலேயிருந்து ஒரு தகவல் வந்தது. ஆர்னால்டுக்கு! வடை மாதிரி ஒரு மர்மத்தட்டு. அது எரிகின்ற நெருப்பை பொழியுது... அப்படி என்று!

ஆர்னால்ட்டு சும்மா இருப்பாரா? உடனே விமானத்தை எடுத்துக் கொண்டு புறப் பட்டார். போற வழியிலே சுமாராக 25 சின்னப் பறக்கும்தட்டுக்கள் அவருக்குத் தெரிந்ததாம்! உடனே அவர் விமானப்படைக்கு செய்தி அனுப்பினார். உடனே ஒரு விமானப்படை விமானம் பறந்து வந்தது! ஆனால் பாருங்க துரதிர்ஷ்டவசமாக அது விபத்துக்குள்ளாகி இரண்டு விமானப்படை அதிகாரிகள் இறந்து போய்விட்டார்கள்!

அதுக்குப் பிறகு கொஞ்சநாள் கழித்து மாவுரித் தீவிலேயிருந்து வந்த செய்தி வெறும் புரளி தான் என்று கண்டு பிடித்துவிட்டார்கள்! அப்படி ஒரு செய்தியை அனுப்பி கொஞ்சம் காசு சம்பாதிக்கலாம் என்று ஆசைப்பட்ட இரண்டு ஆசாமிகளினுடைய கைவரிசை தானாம் அது! அதுவும் தெரிஞ்சு போய்விட்டது!

ஆனால்... ஆர்னால்டு அதை நம்பிறதுக்கு மறுத்தார். கடைசி வரைக்கும் அவர் பறக்கும் தட்டைப் பற்றி எதையாவது புதுசு புதுசா சொல்லிக்கொண்டே இருந்தார்.

1948 ஜனவரி மாதத்திலே ஒரு நாள். வானத்திலே வட்டமான ஒரு வடிவம் தெரிந்தது. ஒரு விமானி அதைப் பார்த்துவிட்டான். உடனே துரத்த ஆரம்பித்தார். அவரோடு விமானம் 30,000 அடி உயரத்திற்குப் போய் விபத்துக்குள்ளாகிவிட்டது!

நாள் ஆக ஆக பறக்கும் தட்டு சம்பந்தமாக பலவிதமான புரளிகள் கிளம்ப ஆரம்பித்து விட்டது. அமெரிக்க இராணுவத்துறை ஒரு விசாரணைக் கமிசனே போடுற அளவுக்கு ஆகிவிட்டது.15 மாதம் பலவிதமான முயற்சிகளுக்கு அப்புறம்– பறக்கும் தட்டு வெறும் புரளி தான் என்று அந்த கமிஷன் முடிவு செய்துவிட்டது.

சரி, அப்படி என்றால் சிலபேர் வட்டமாக எதையோ பார்த்தேன் என்று சொன்னார்களே... அது எல்லாம் பொய்யா? 1951 இலே தான் அதுக்கு விடை கிடைத்தது! அமரிக்கக் கடற்படை காஸ்மிக் கதிர் ஆய்வுகளுக்காக நூறு அடி விட்டமுள்ள பலூன்களை பார்த்து விட்டுத்தான் எல்லோரும் பறக்கும் தட்டு என்று நினைத்து பயந்து போனார்கள்!

பறக்கும்தட்டு என்னென்ன செய்யும் என்று சொன்னார்களோ அதையெல்லாம் அந்த பலூன்கள் செய்ய முடியும் என்று கண்டுபிடித்தார்கள். இதற்குப் பிறகு பறக்கும்தட்டு புரளி கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்துவிட்டது.

புரளியைக் கிளப்பிவிடுவது இருக்கே... அது ஒரு விதமான மனோவியாதி. ஒருத்தர் வானத்திலே ஏதோ ஒரு வட்டவடிவமான பொருளைப் பார்க்கின்றார். அதை அடுத்தவர்களிடம் சொல்கிறார். அடுத்தவர் அதை நம்ப மறுக்கின்ற போது இவருக்கு எரிச்சல் வருகின்றது! அதனாலேயே இவர் இன்னமும் புதிது புதிதாக ஜோடித்துக் 'கொண்டே போகின்றார்.


"என்னப்பா இது நான் தான் என் கண்ணாலே பார்த்தேன் என்கிறேன். பிறகு அப்புறம் என்ன.. பச்சையாக ஒரு புகை கூட வந்தது...உள்ளே சிவப்பாக ஒரு பெண் உட்கார்ந்து கையை வெளியே நீட்டியதைக்கூட பார்த்தேன்... " இப்படி அடுக்க ஆரம்பித்துவிடுவார். இதிலே ஒரு பெரிய இடைஞ்சல் என்னவென்றால் கடைசியிலே இவர் தான் சொல்கிற பொய்யை தானே நம்ப ஆரம்பித்துவிடுவார்.

இந்த மனோவியாதி பல விடயங்களிலே பல ஆசாமிகளிடம் இருக்கு! இவ்வளவு விவகாரங்களுக்கு மத்தியிலே நாங்கள் ஊர் ஆசாமி ஒருவர் வேகமாக ஓடிவந்தார். சேர்! பறக்கும்தட்டை நான் நிஜமாகவே என் கண்ணாலே பார்த்தேன்! இப்பவும் அது பறந்து கொண்டு தான் இருக்கின்றது! நீங்கள் வேண்டும் என்றால் என் கூடவாருங்கள். நான் காட்டுகின்றேன் என்றார்.

அதைக்கேட்ட இன்னொருவர் " சரி காட்டுங்க பார்க்கலாம் "என்று புறப்பட்டுப் போனார். அவர் சொன்னது நிஜம்தான் என்பதை புரிந்து கொண்டார். என்ன விடயம் தெரியுமா? அவர் அழைத்துக் கொண்டு போய் " பக்கத்து வீட்டுக்குள்ளே கொஞ்சம் எட்டிப் பாருங்க!" என்றார்! இவர் மெதுவாக எட்டிப்பார்த்தார். அந்த வீட்டுக்காரர் அசையாமல் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கின்றார். அந்த அம்மாவுக்கு என்ன கோபமோ தெரியவில்லை...

அடுப்பங்கரையிலேயிருந்து ஒவ்வொரு தட்டா பறந்து வந்து வெளியிலே விழுந்து கொண்டிருக்கின்றது! இதுக்கும் ஒரு விசாரணைக் கமிசன் போட வேண்டியது தான்!

# தங்கத் தமிழ் மாணவர்களுக்கு சங்கத் தமிழ்ப் பணிகள்-2019



க.பொ.த (உயர்)தரம் தமிழ் மொழிப் பாட மாணவர்கள் 2019 இல் முதன் முதலாகப் புதிய பாடத்திட்டத்திலே கற்றுப் புதிய முறையிலே பரீட்சை எழுதப் போகிறார்கள். பரீட்சையெழுதுவதற்கு இன்னும் முழுமையாக ஐந்து மாதங்களேயுள்ள நிலையில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க அனுசரணையுடன் வடமாகாணக் கல்வித் திணைக்களம் (தமிழ் மொழிப் பிரிவு) ஒரு முன்னோடிக் கருத்தரங்கை நிகழ்த்தி முடித்திருக்கிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா எனும் ஐந்து மாவட்டங்களையும் 12 வலயங்களையும் உடையது வடக்கு மாகாணம். இவ்வடக்கு மாகாண தமிழ் மொழிப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராகப் புதிதாகப் பதவி யேற்றிருப்பவர் வ. வசந்தகுமார் (SLEAS-III). இவரது தமிழாற்றல், நிர்வாகத்திறன் காரணமாக இம் மாகாணம் "மீண்டும் தொடங்கும் மிடுக்கு'' எனத்துளிர் விடத்தொடங்கியதன் சான்றாக இம்முன்னோடிக் கருத்தரங்கு அமைந்திருந்தது.

இதுவரையுள்ள பரீட்சைப் பெறுபேறுகளின்படி க.பொ.த. (உயர்) தரம் தமிழ் மொழிப் பாடத்தில் 100% சித்தியைப் பெற்ற பாடசாலைகள் சுமார் 40% இற்கும் குறைவானவை. 100% சித்தியை முழுமையாகப் பெற்ற வலயம் ஒன்று கூட இல்லை. எனினும் மன்னார் வலயம் 96% சித்திகளைப் பெற்றுள்ளது. வலிகாமக் கல்வி வலயம் சற்று உயர்வடைந்திருப்பதுடன் அதிக A தர சித்தியைப் பெற்றுள்ளது. தமிழ்ப் பாடத்திலே சகல மாணவரையும் சித்தி பெறச் செய்ய வேண்டும் என்பது இலக்காகும்.



கடந்த காலங்களிலே நடைபெற்ற ஆசிரிய இடமாற்றங்களும், மாணவர்கள் கம்பராமாயணம் பகுதியைத் தவிர்த்து குறித்த சில பகுதிகளை மட்டும் கற்பதும், ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு, இலக்கணம் ஆகிய பகுதிகளிலே போதிய தேர்ச்சியற்றிருப்பதும் க.பொ.த. (சா/த) தரத்திலே சாதாரண திறமையுடைய் மாணவர் மட்டுமே கலைப் பிரிவுக்குள் நுழைவதும் போன்ற பல காரணிகள் இதுவரை கால பெறுபேற்று வீழ்ச்சிக்குக் காரணிகளாக அமைந்திருந்தன.

இக் கருத்தரங்கு பாட நூலின் சரியான அறிமுகம், ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கான துல்லியமான ஆழமான விளக்கம், பரீட்சையில் விடையளிக்கும் போது கவனிக்க வேண்டிய நுட்பங்கள், மாணவர்கள் இதுவரை செய்த தவறுகள், இவ்வருடம் நடைமுறைக்கு வரவுள்ள புதிய விடயங்கள் எனப் பல விடயங்களை மாணவர்களுக்கு உத்வேகத்துடன் வழங்கியிருந்தது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க அமைப்பாளர்களாகவும், தலைவர்களாகவும் பணியாற்றித் தற்போது யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவராகவும் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் விளங்குகின்ற தமிழ்ப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர் தம் துணைவியார் (கூச்சுயின்- ஜப்பான்) பல்கலைக் கழக முன்னாள் ஆய்வுப் பேராசிரியருமான திருமதி முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் தமிழ்ச் சங்க ஆதரவை வழங்கியதுடன் இதன் பிரதான காரணகர்த்தாக்களாகவும் விளங்கினார். உலகெங்கும் தமிழ்ப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற இவர்கள் கனடாவிலிருந்து வந்து வடமாகாணக் கல்வித் திணைக்களம் மூலம் இந் நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தார்கள்.

இவர்களுடன் வளவாளர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செல்வறஞ்சிதம் சிவசுப்பிரமணியம், விரிவுரையாளர்களான பேராசிரியர் செ.யோகராஜா, சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரினா பிரான்சிஸ், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன், கொழும்புப் பல்கலைக் கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் அ.பௌநந்தி, தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினரும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளருமான கு.பாலசண்முகம், முன்னாள் துணைச் செயலாளரும் தற்போதைய யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரித் தமிழாசிரியரும் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளருமாகிய நாக. தமிழிந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தற்காலிக விரிவுரையாளரும் தற்போது யாழ். பொருளியற் கல்லூரி தமிழ் விரிவுரையாளருமாகிய ந.சத்தியவேந்தன் ஆகியோர் கலந்து விரிவுரையாற்றியிருந்தனர்.

சகல மாணவர்களுக்கும் மாதிரி வினாத்தாள் மூலம் விளக்கம் வழங்கப்பட்டதுடன் பரீட்சை வழிகாட்டிக் கையேடொன்றும் வழங்கப்பட்டிருந்தமை சிறப்பம்சமாகும். திங்கட்கிழமை (11.02.2019) வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனின் ஆசியுரையுடன் வவுனியா சைவப்பிரகாச பெண்கள் கல்லூரியில் இக் கருத்தரங்கு நடைபெற்றது. செவ்வாய்க்கிழமை வடமராட்சி, தென்மராட்சி வலயங்களுக்காக வரணி மத்திய கல்லூரியிலும் மறுநாள் வலிகாமக் கல்வி வலயக் கருத்தரங்கு மருதனார்மடம் இராமநாதன் பெண்கள் கல்லூரியிலே தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் சந்திரலிங்கம் தலைமையிலே பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான சி. மதியழகன், ந.காண்டீபன் ஆகியோரின் ஆசியுரையுடனும், யாழ்ப்பாண வலயக் கருத்தரங்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெற்றது.

நிறைவாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கருத்தரங்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் உடைய ஆசியுரையுடன் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், குமாரபுரம் மகா வித்தியாலயம் ஆகிய மூன்று இடங்களிலுமாகச் சிறப்புற நடைபெற்று முடிந்தது.

முன்னாள் தமிழ்த்துறை தலைவரும் தற்போதைய வாழ்நாள் பேராசிரியரும் ஆகிய அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், வட மாகாண தமிழ்மொழிப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் வ. வசந்தகுமார் ஆகியோர் முப்பெரும் தூண்களாக விளங்கி வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோரின் ஆலோசனைக்கமைவாக நடைபெற்ற இம் முன்னோடிக் கருத்தரங்கு காலத்தால் பயனுடையது என்பதை ஞாலத்தில் மாணவர் சீலம் உரைத்திடும்.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் ஆற்றி வரும் பெரும் பணிகளில் இது மிகவும் குறிப்பிடத்தக்க பணியாகும். தலைவர் ச.லலீசன், செயலாளர் இ.சர்வேஸ்வரா ஆகிய தமிழ்ச் சங்க உறுப்பினர் பலர் இக் கருத்தரங்கு சிறப்புற நடைபெறப் பணியாற்றினர்.

**நாக.தமிழிந்திரன்**
(என்.புவனேந்திரன்)
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்
(முன்னாள் துணைச் செயலாளர்)

# விவசாயத்தை நவீனமயப்படுத்த 12000 மில்லியன் ரூபா நிதி

(கொழும்பு)

விவசாயத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்துக்கு 12,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் ஊடாக விவசாயிகளின் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது தொடர்பான நிகழ்வு விவசாய அமைச்சில் அண்மையில் இடம்பெற்றது.

தேசிய உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு வர்த்தகச் சந்தையை அறிமுகப்படுத்துதல் தனியார் துறையினருடனான தொடர்புகளை மேம்படுத்தி விவசாயிகளுக்கிடையில் இடைத்தரகர்களின் தலையீட்டை கட்டுப்படுத்துவதற்கும் விவசாயிகளின் அறுவடைக்கு ஆகக்கூடிய விலையை பெற்றுக்கொடுப்பதும் இதன் நோக்கமாகும்.

இதேபோன்று விவசாயிகளுக்கு தேவையான சந்தை வசதிகளை மேம்படுத்துவதற்கும் உற்பத்தியின் போது நவீனதொழில்நுட்பத்தை பெற்றுக்கொடுப்பதுமே இந்த திட்டத்தின் மற்றுமொரு நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் அந்தந்த மாவட்டத்திற்கான தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். வடமாகாணத்தில் நிலக்கடலைக்கு டேவிட் கிரேம் நிறுவனமும் கிழக்குமாகாணத்தில் நிலக்கடலை கொள்வனவு செய்வதில் அமல் கிரேம் நிறுவனமும் வடமத்திய மாகாணத்தில் பப்பாசிக்கு ஹேலிஸ் நிறுவனமும் ஊவா மாகாணத்தில் பெஷன் ப்ருட்டுக்காக லங்கா கெனரிஸ் நிறுவனமும் வடமத்திய மாகாணத்தில் கோமரிக்காஸ்மெக் நிறுவனமும் கொள்வனவு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

அத்தோடு இதில் இரு தரப்பினரும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வர்.

இந்த உடன்படிக்கை ஊடாக இந்த மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து பெறப்படும் தரமான அறுவடைகளை இந்த நிறுவனங்கள் கொள்வனவு செய்யும்.

இதேபோன்று இந்த அறுவடைகளை உள்ளூர் மற்றும் வெளிநாடு சந்தைகளில் சந்தைப்படுத்துவதற்கும் இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைக்கும்.

இந்த திட்டகாலப்பகுதியில் ஆகக்கூடிய விலைகளின் கீழ் கொள்வனவுகளை மேற்கொள்ளுமாறும் அதன் மூலம் விவசாயிகளுக்கு ஆகக்கூடிய விலையை பெற்றுக் கொடுக்கும் வகையில் உடன்படிக்கையை மேற்கொள்ளுமாறும் விவசாய அமைச்சர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

உற்பத்தியை பயனுள்ள வகையில் முன்னெடுத்தல், உற்பத்தி செலவை குறைத்தல், தற்பொழுது விவசாய வணிகமயம் வர்த்தகத்தை நோக்காக கொண்ட பயிர் உற்பத்தி போன்ற விடயங்கள் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (7)

# யாத்திரைக்குச் சென்று வீடு திரும்பிய வேளையில் விபத்து

## நால்வர் படுகாயம்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா அட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை சென்.பெட்றிக்ஸ் தேவாலயத்திற்கு முன்பாக நேற்று முன்தினமிரவு 11.30 மணியளவில் வான் ஒன்று வீதியை விட்டு விலகி மதில் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் வானில் பயணித்த 8 பேரில் 4 பேர் படுகாயங்களுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். சிவனொளி பாதமலை யாத்திரைகளை மேற்கொண்டு விட்டு நுவரெலியா பகுதிக்கு உறவினர்கள் வீட்டுக்கு சென்று கொண்டிருந்த வானே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். தூக்க கலக்கம் ஏற்பட்டதால் வாகன சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7)

## பால்மா இறக்குமதி விவகாரம்

# சுகாதார அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்கவும்

## ஹரித அளுத்கே வலியுறுத்து



(கொழும்பு)

சுகாதார அமைச்சர் பால்மா இறக்குமதி நிறுவனங்களுக்கு சார்பாக செயற்படுவதால், சுகாதார அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதி அமைச்சர் புத்திக பத்திரண நாட்டு மக்கள் தொடர்பில் சிந்தித்து பால்மாவால் குறித்து நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்திய போதிலும், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன அது தொடர்பில் ஆராயாமல், பால்மா நிறுவனங்களைப் பாதுகாக்கும் வகையிலான அறிவிப்பை விடுத்துள்ளதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அத்துடன் கடந்த காலங்களில் மருந்துப் பொருட்கள் கொள்வனவின் போது மோசடி இடம்பெற்றுள்ளதுடன் நெவில்பெர்னாண்டோ வைத்திய சாலையை அரசாங்கம் பொறுப்பேற்ற போதும் அது உரிய முறையில் இடம்பெற்றிருக்கவில்லை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுகாதார அமைச்சருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினம் - ஒரு பார்வை



08

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



பூநகரிக் கோட்டையின் எச்சங்கள்

1658 ஆம் ஆண் டில் இக் கோட்டையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர், இங்கே பெருமளவில் திருத்தவேலைகள் எதையும் செய்யவில்லை. இக் கோட்டையின் தள அமைப்பு ஏறத்தாழச் சதுர வடிவமானது. ஆனையிறவுக் கோட்டையை விடச் சற்றுப்பெரிதானது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் (1805இல்) இக் கோட்டை ஒரு ஓய்வுவிடுதியாகப் பயன்பட்டு வந்தது. பிற்காலத்தில் இது கைவிடப்பட்டது. 1980களுக்குப் பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுப் போரினால் இக் கோட்டையும் பெரும் சேதங்களுக்கு உள்ளானது. 2004 ஆம் ஆண்டளவில் இதன் சில பகுதிகள் மட்டுமே எஞ்சியிருந்தன. இது வன்னி நிலத்தில் இருந்த கோட்டையாகும்.

## மறுக்கப்பட்ட மதச்சுதந்திரம்


போர்த்துக்கீசர் அரசு கட்டில் ஏறிய பின்னர் ஈழத்தில் கட்டிறுக்கமான அரசியல்சார் நடவடிக்கைகள் அரங்கேறின. கல்விக்கூடங்களை அமைத்த போர்த்துக்கீசர் அவற்றை மதம் மாற்றத்துக்கான ஓர் கருவியாகவும் பயன்படுத்தினர். தமது கல்விக் கூடங்களில்/ குருமடங்களில் கிறிஸ்தவ கல்வியை மட்டும் புகட்டி அங்கு கற்றோருக்கு உயர்தொழில் வாய்ப்புக்களை வழங்கினர். தமிழர்களில் பலர் சலுகைகளுக்காகவும் உயர் தொழில்களுக்காகவும் மதம் மாறினார்கள். சுதேச கல்விக் கூடங்கள் ஆரம்பக்கல்வியூட்டும் நிறுவனங்களாக மட்டுமே செயற்பட்டமையினால் பாரம்பரிய வழிபாட்டு மரபுகள், கல்வி, சடங்குகள் போன்றன படிப்படியாகத் தடைசெய்யப்பட்டு கிறிஸ்தவ சூழலுக்குள் மக்கள் வலிந்து உள்வாங்கப்பட்டனர். கிறிஸ்தவ இலக்கியங்களுக்கு முன்னுரிமை அளித்தனர்.

தமிழ்ப் பணியை மற்றும் சைவப்பணியை தொடர விரும்பிய பலர் தமிழ் நாட்டுக்கு ஓழித்து ஓடினர்.

போர்த்துக்கீசர் காலத்தில் மறுக்கப்பட்டிருந்த மதச்சுதந்திரம், சுதேச மொழிக் கல்வி என்பன ஒல்லாந்தர் காலத்தில் ஓரளவு தளர்த்தப்பட்டமையினால் ஒல்லாந்தர் காலத்தில் இந்து சமயம் சார்பான சிற்றிலக்கியங்கள் பல தோன்றவும் வழியேற்றப்பட்டது.

மேலும் இக் காலத்தில் நிலவிய ஆட்சியில் ஓரளவு நெகிழ்வுத் தன்மை விளங்கியது வட பகுதியில் ஒல்லாந்தரால் சீர் செய்யப்பட்ட 'தேசவழமைச் சட்டம்' காரணமாக சுதேச மக்கள் தமது சமூக, பண்பாட்டு அம்சங்களைப் பேண ஓரளவு வழிகிடைத்தமையானது நெகிழ்வுத் தன்மைக்கு ஒரு காரணமாக அமைந்தது.

## டச்சுக்கால கிறிஸ்தவ தேவாலயங்கள்



பண்டத்தரிப்பு



மானிப்பாய்




சங்கானை



வண்ணார்பண்ணை

அதேவேளை ஒல்லாந்தரால் பெரிதும் பாதிப்பிற்குள்ளான கத்தோலிக்க சமயம் நெருக்கடியிலிருந்து தன்னைப் பேணிக் கொள்வதற்கு பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தது.

## போர்த்துக்கீசர் இடிக்காமல் விட்ட பிரசித்தி பெற்ற இணுவில்



1690 இல் மதம் பரப்புவதற்கு நல்லூரில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட தங்கிப் படிக்கும் வசதியுடன் கூடிய கல்விக்கூட்டம்

## பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்

யாழ்ப்பாண அரசர் காலத்தில் இக்கோயிலை அண்டி ஒரு மடம் இருந்ததாகவும் அதை கோயிலுக்கு வரும் மக்கள் பயன்படுத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது யாழ்ப்பாணத்தை போர்த்துக்கீசர் கைப்பற்றியபின்னர் யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்த எல்லா இந்துக் கோயில்களையும் இடித்தனர்.

அவ்வேளையில் இக்கோயிலை அண்டியிருந்த சைவமக்கள் அக்கோயில் இருந்த பிள்ளையார் சிலையை ஒழித்து வைத்து விட்டு அக்கட்டடத்தை ஒரு மடம் எனக்கூறியதால் அக்கட்டடத்தைப் போர்த்துக்கீசர் இடிக்காமல் விட்டனர். 1800களில் பழைய கோயில் கட்டடம் திருத்தப்பட்டுக் குடமுழுக்கும் இடம்பெற்றதாகத் தெரிகிறது.

## நல்லூர் கிறிஸ்தவ குருமடம்

1690இல் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காக நல்லூரில் ஒல்லாந்தரால் தங்கிப்படிக்கும் வசதி கொண்ட குருமடம் கட்டப்பட்டது. ஆரம்பத்தில் இக் கல்விக் கூடம் (குருமடம்) பிரசித்தி பெற்றிருந்தாலும் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்ததால் 1723இல் கல்விக்கூடம் (குருமடம்) முற்றாக மூடப்பட்டு விட்டது. அதன்பின் மாணவர்கள் கொழும்பு சென்றே படித்தார்கள்.

## யாழ்ப்பாண ஒல்லாந்து இலட்சனை

இந்த டச்சுக்காலத்து (ஒல்லாந்து) இலட்சனையின் தமிழ் விளக்கம் யாதெனில்

இது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் முக்கிய உள்நாட்டு வருவாயைத் தரக்கூடிய பனைமரம் என்பதாகும். ஒரு தமிழ்ப் பாடலின் படி இந்த மரத்தின் மூலம் 801 வகையான பயன்பாடுகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விலட்சணையில் பொருந்தியிருக்கும் தலைப்பாகை, கொழும்புப் பிரதேசத்துக்கு (கோட்டை இராச்சியம்) அடுத்து யாழ்ப்பாணப் பிரதேசம் காலணித்துவ ஆட்சியில் முக்கியமானதொரு இடத்தை வகித்திருப்பதைக் குறிக்கின்றது.



யாழ்ப்பாணப்பட்டினத்தில் ஒல்லாந்தரின் குடியேற்றத்திற்கான இலட்சனை

இவ்விலட்சணையின் பகுதிகள் எப்போது அறிமுகப்படுப் படுத்தப்பட்டது என்ற விளக்கம் அறியப்படவில்லை. இவ்விலட்சனை 1717-1720 காலப் பகுதியில் பதியப்பட்ட எழுத்துப் பிரதியில் எடுக்கப்பட்டதாக இணையத்தில் கூறப்பட்டுள்ளது. (தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




"நாவலர் தனது நடவடிக்கைகளை 1864 இல் தமிழ் நாட்டிலுள்ள சிதம்பரத்திற்கு விஸ்தரித்தார். சிதம்பரத்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க சைவக்கோவிலை சைவசமயத்தினதும் அதன் பாரம்பரியங்களினதும் தாய்வீடாகவே நாவலர் கருதியதுடன் அந்தக் கலாசார மையத்தின் ஒரு நீட்சியே யாழ்ப்பாணம் என அவர் எப்போதுமே நம்பினார்"

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

தமிழ் இளைஞர்களை நவீன அம்சங்களுக்கும் நியாயபூர்வமான சிந்தனைக்கும் அறிமுகப்படுத்துவதற்குமாக நாவலர் இந்த முயற்சியை மேற்கொண்டார்.

சைவப் பாடசாலைகளை நிறுவுவதனால் சைவசமயத்தை இளைஞர்கள் விளங்கிக் கொள்வதும் மாத்திரமின்றி தமிழ் மொழியையும் அதன் இலக்கியத்தின் பெருமையையும் அவர்கள் உணர்வார்கள் எனவும் அவர் நம்பினார்.

மிஷனரி பாடசாலைகளிற் கற்பிக்கப்படும் பாடங்களுக்குப் போட்டியாக இருக்கும் வகையில் பாடவிதானத்தில் வேறு பாடங்களையும் சேர்த்துக் கொண்டார். எல்லாத் தமிழ்க் கிராமங்களிலுமே அவர் இவ்வகையான பாடசாலைகளை நிறுவ விரும்பினார்.

ஆனால் அரசாங்கத்திடமிருந்து நிதியுதவி கிடைக்காமையினால் (அவரது பாட விதானத்தில் சமயம் சேர்க்கப்பட்டிருந்ததால்) அவருக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டு அவர் ஆரம்பத்தில் திட்டமிட்டபடி பொது மக்களின் உதவியுடனேயே தனது பாடசாலைகளை அமைக்கும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள அநேகமான ஆரம்பத் தமிழ்ப் பாடசாலைகள் கட்டணம் அறவிட்ட போதும் நாவல்ர் தனது பாடசாலைகளில் மாணவர்கள் சேர்வதை ஊக்குவிப்பதற்காக இலவசமாகவே கல்வியை வழங்கினார்.

அவரும் அவரது ஊழியர்களும் சுயவிருப்பில் தொழில் புரிய வேண்டியிருந்ததால் நாவலரது பாடசாலைகள் பொது மக்களினது ஆதரவிலும் அவரது சொந்தப் பங்களிப்பிலுமே தங்கியிருக்க நேர்ந்தது.

1855 ஆவணியில் கோப்பாயில் மேலுமொரு பாடசாலையை நிறுவினார். அதன்பின் அவர் தமிழ்ச் சமூகத்திடம் பின்வருமாறு விண்ணப்பித்தார்.

நான் ஏற்கனவே வண்ணார்பண்ணை, கோப்பாய், சிதம்பரம் ஆகிய இடங்களில் பாடசாலைகளை நிறுவியுள்ளது உங்களுக்குத் தெரியும். எனவே அவற்றையொத்த பாடசாலைகளை வட மாகாணத்திலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் நிறுவுவதுடன் சைவக்கோவில்களில் உரைகளை ஆற்றிக் கல்வியும் சமயமும் தழைக்கச் செய்ய வேண்டுமென உங்களைப் பணிவுடன் வேண்டுகின்றேன்.

நாவலர் தனது நடவடிக்கைகளை 1864 இல் தமிழ்நாட்டிலுள்ள சிதம்பரத்திற்கு விஸ்தரித்தார். சிதம்பரத்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க சைவக்கோவிலை சைவசமயத்தினதும் அதன் பாரம்பரியங்களினதும் தாய்வீடாகவே நாவலர் கருதியதுடன் அந்தக் கலாசார மையத்தின் ஒரு நீட்சியே யாழ்ப்பாணம் என அவர் எப்போதுமே நம்பினார்.

நாவலர் இச் சைவப் பாடசாலைகளைத் தாபித்துத் தமிழைப் போதனா மொழியாகப் பயன்படுத்திய போதும் தமிழ்ச் சமூகத்துக்கு ஆங்கில மொழித்திறன் அவசியம் என நம்பியதால் அந்த நோக்கத்திற்காக 1872 இல் வண்ணார்பண்ணையில் ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையையும் நிறுவினார்.

ஆயினும் இரண்டு ஆண்டுகளின் பின்னர் இது மூடப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் இந்து உயர் பாடசாலை என்ற பெயரில் 1890 இல் மீண்டும் தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் 1895 இல் இது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாகியது.

நாவலருடைய ஊக்கமிகு கல்வி முயற்சிகள் அவருடைய மாணவர்களையும் சகாக்களையும் உணர்வூட்டி அவருடைய பணியைத் தொடர வைத்தன. அப்படியானவர்களில் செந்தில்நாதஐயர், சதாசிவம்பிள்ளை, சி.வை.தாமோதரம்பிள்ளை, பொன்னம்பலபிள்ளை, ஆறுமுகம்பிள்ளை என்போர் அடங்குவர்.

நாவலரது மாணவர்கள் தமது ஆசிரியரை முன்னுதாரணமாக கொண்டு அவரது கிறிஸ்தவ எதிர்ப்பு நடவடிக்கைகளில் உதவினர். கே.வேலுப்பிள்ளை, கோப்பாய் சபாபதி நாவலர், மாதகல் அருணாச்சல ஐயர், வண்ணார்பண்ணை சுவாமிநாத பண்டிதர், சாவகச்சேரி பொன்னம்பலபிள்ளை, கொக்குவில் சபாரத்தின முதலியார், சி. கணேசையர், ரி. கைலாசபிள்ளை, குமாரசுவாமிப்புலவர், எம்.பொன் ணையா பிள்ளை, நீர்வேலி வி.மயில்வாகனம்பிள்ளை, தெல்லிப்பழை எஸ். கதிரிப்பிள்ளை, மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்பு அ.பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் முக்கியமான மாணவர்களாகும்.

இவர்கள் யாவருமே சைவத் தமிழராக இருந்ததுடன் சைவ சமய தமிழ்க் கல்வியைத் தமிழ்ப் பிரதேசத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் மேம்படுத்தும் செயற்பாடுகளில் முனைப்பாக இருந்தவர்கள். பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர்களுடைய நடவடிக்கைகள் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களுக்கும் விரிவடைந்தன.

நாவலரின் பின்னர் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவியவர்களில் மேலும் சில முக்கியமானவர்களை இங்கு குறிப்பிடுவது ஏற்புடையதாகவிருக்கும். சி.வை. தாமோதரம்பிள்ளை 1876 இல் ஏழாலையில் ஒரு சைவத் தமிழ்ப் பாடசாலையை தாபித்தார். இவர்களின் இந்தப் பணியில் அருணாசல உபாத்தியார் என்பவர் முக்கியமானவர்.

இவர் பல ஆசிரியர்களை முறையாகப் பயிற்றுவித்ததுடன் பல சைவப் பாடசாலைகளையும் நிறுவியுள்ளார். காரைநகரில் 1885 இல் இவரால் நிறுவப்பட்ட பாடசாலை பின்னர் காரைநகர் இந்துக் கல்லூரியானது.

(தொடரும்)

# ஆசிரியர்களை சொந்த மாவட்டங்களிலே கடமைக்கு மீள அனுப்ப வேண்டும்



## கிழக்கு ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்பு

(காத்தான்குடி)

தமது சொந்த மாவட்டங்களை விட்டு வேறு மாவட்டங்களில் கடமை புரிகின்ற ஆசிரியர்களை அவரவர் வாழும் மாவட்டங்களுக்கு கடமை புரியும் வகையில் ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கல்வி அதிரிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் இந்த இடமாற்றங்களை வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். இது விடயமான கலந்துரையாடல் மட்டக்களப்பு ஆளுநர் பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இக் கலந்துரையாடலில் மாகாண கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி பணிப்பாளர்கள், மேலதிக கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆளுநரின் புதிய உத்தரவின் படி இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் உடனடியாக (பெப்பரவரி 19 தொடக்கம்) கோரப்படவுள்ளதாக கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமது சொந்த மாவட்டத்தில் கடமை புரிவதற்கான விண்ணப்பத்தை பூரணப்படுத்தி இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கும்பட்சத்தில் அது பரிசீலிக்கப்பட்டு ஏப்ரல் 5 ஆம் திகதி தொடக்கம் இடமாற்றங்கள் வழங்கப்படும் எனவும் ஆளுநரின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த இடமாற்றத்தின் காரணமாக கிழக்கு மாகாணத்தில் ஏற்படும் சுமார் 800 ஆசிரிய வெற்றிடத்தை உடனடியாக நிரப்புவதற்காக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரவுள்ளதாகவும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் புதிய ஆசிரியர் நியமனங்களும் வழங்கப்படவுள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பிரகாரம் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு ஒவ்வொரு வலயக்கல்வி பணிப்பாளர் அலுவலகத்திலும் புதிய ஆசிரியர் தேர்வுக்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்தி வெற்றிடமுள்ள பாடசாலைகளில் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப் படவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

# நாடு முழுவதும் தேங்காய் எண்ணெய் பரிசோதனை

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து தேங்காய் எண்ணெய் விற்பனை மற்றும் உற்பத்தி நிலையங்களை பரிசோதனை செய்வதற்கு பொது சுகாதார பரிசோதகர்களின் சங்கம் நேற்று முதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

தரமற்ற தேங்காய் எண்ணெய் தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக தமது சங்கத்திற்கு கிடைத்துள்ள பெருமளவு முறைப்பாடுகளுக்கு அமையவே மேற்படி பரிசோதனையை நேற்று முதல் ஆரம்பித்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

இதற்கிணங்க தேங்காய் எண்ணெய் விற்கப்படும் இடங்கள் மற்றும் உற்பத்தி செய்யப்படும் இடங்களில் திடீர் பரிசோதனைகளை நடத்தி அதன் மாதிரியை இரசாயன பரிசோதனை பிரிவுக்கு அனுப்பி அதன் அறிக்கையை பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரசாயன பரிசோதனை அறிக்கை கிடைத்ததும் அதனை ஆராய்ந்து அதற்கிணங்க அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தரமற்ற தேங்காய் எண்ணெயை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (7)

# கூட்டு ஒப்பந்த முறையில் இருந்து விடுபட்டு மாற்றுப் பொறிமுறைக்குச் செல்ல வேண்டும்

## முதலாளிமார் சம்மேளனம் யோசனை

(கொழும்பு)

கூட்டு ஒப்பந்த நடைமுறையிலிருந்து விடுபட்டு மாற்றுப் பொறிமுறைக்குச் செல்ல வேண்டும் என முதலாளிமார் சம்மேளனம் யோசனை முன்வைத்துள்ளது.

முதலாளிமார் சம்மேளனத்தின் செயலாளர் லலித் ஒபேசேகர நேற்று முன்தினம் ஊடக சந்திப்பின் போது இந்த விடயத்தை தெரிவித்தார்.

தேயிலை தொழில்துறையில் முன்னெடுக்கப்படும் பாரம்பரிய கொடுப்பனவு முறைமைகளில் இருந்து மாற்றத்தை மேற்கொள்ள பங்குதாரர்கள் அனைவரும் முன்வரவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். 700 ரூபாய் அடிப்படை வேதனத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெருந்தோட்டத் தொழிலாளர்களும் அவர்களுக்கு ஆதரவான தரப்பினரும் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் கூட்டு ஒப்பந்தமுறையிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், முதலாளிமார் சம்மேளனத்தின் செயலாளர் லலித் ஒபேசேகர கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தரப்பினரிடம் இந்த யோசனையை முன்வைத்துள்ளார். (7)

# சீமெந்து மூடை விலையில் மாற்றம்

(கொழும்பு)

சீமெந்து மூட்டையொன்றின் விலை 100 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சீமெந்து நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீமெந்து மூட்டையொன்றின் விலையை அதிகரிக்குமாறு இலங்கை சீமெந்து நிறுவனம் ஒன்று கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

இதனையடுத்து, நுகர்வோர் விவகார அதிகார சபை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சீமெந்து மூட்டையொன்றின் புதிய விலை ஆயிரத்து 95 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சீமெந்து நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1649


### பவித்ரா

அன்பை ரசிக்கத் தெரியாதவனுக்கு எந்தப் பேரழகி மனைவியானாலும் அவன் வாழ்க்கை சுமைதான்.... ரசிக்கத் தெரிந்தவனுக்கு அழகற்ற மனைவிகூட தேவதைதான்



### குணால்

எதைத் தொலைத்தாலும் தேடிக் கண்டுபிடித்து விடலாம், ஆனால் தொலைத்த வாழ்நாளை மீட்டெடுக்கவே முடியாது. வாழ்வை அர்த்தமுள்ளதாய் வாழ்வோம்



### பெருமாள்

நல்லவனிடம் கண்ட ஒரு தவறுக்காக அவனை விட்டு விலகாதே, தீயவனுடன் கண்ட ஒரு நற்செயலுக்காக அவனுடன் சேராதே



### அஸ்விதா

சிலரை சந்தோசப்படுத்த ரொம்ப சிரமப்படத் தேவையில்லை... நம்ம கஷ்டத்தை சொன்னாலே போதும்!




### சுஜன்

ஒருபொருள் கிடைக்கும் போது தெரியாது... அதைத் தொலைக்கும் போது தான் தெரியும்... அது நமக்கு எவ்வளவு முக்கியமானது என்று



### மோகனா

கண்களை விட கண்ணீருக்கு மதிப்பு அதிகம். ஏனென்றால் கண்கள் உலகத்தைக் காட்டும்... கண்ணீர் உள்ளத்தைக்காட்டும்!!!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சுகாதார அமைச்சு நோயாளர்களை உருவாக்கும் அமைச்சாக இருக்கக்கூடாது

## சமந்த ஆனந்த தெரிவிப்பு



(கொழும்பு)
மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் அமைச்சாக சுகாதார அமைச்சு இருக்க வேண்டுமே ஒழிய நோயாளர்களை உருவாக்குகின்ற அமைச்சாக இருக்கக்கூடாதென அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமந்த ஆனந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சமந்த ஆனந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது சுகாதார அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சர் ராஜித சேனாரட்னவினால் மக்களுக்கு தேவையான எந்தவொரு சுகாதார செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இதேவேளை இறக்குமதி செய்யப்படும் பால்மாவைப் பரிசோதனை செய்வதற்கு எமது நாட்டில் போதுமான உபகரணங்கள் இல்லை.

இந்நிலையில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கு சான்றிதழ் வழங்கப்படுமென நாடாளுமன்றத்தில் அவர் எவ்வாறு கூற முடியும்.

இவ்வாறு பொறுப்பற்ற விதமாகச் செயற்படும் ராஜிதவை பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்பதுடன் சுகாதார அமைச்சினை ஜனாதிபதி பொறுப்பின் கீழ் கொண்டுவர வேண்டும்" என சமந்த ஆனந்த தெரிவித்துள்ளார். (7)

# வாழைத்தோட்டம் துப்பாக்கிச்சூடு; சந்தேக நபரான ரய்னா கைது

(வாழைத்தோட்டம்)
வாழைத்தோட்டம் - வேல்லவீதி பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கெசல்வத்தை தினுக்கவின் உதவியாளரான ரய்னா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் அதிரடிப்படையால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்த நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் மீது, உந்துருளியில் வந்த அடையாளம் தெரியாத இருவர் குறித்த துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் பாதாள குழுக்கள் இடையேயான மோதல் என பொலிஸ் பிரிவு தெரிவித்திருந்தது.

டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள கெசல்வத்தை தினுக என்ற பாதாள உலக குழு உறுப்பினரின் குழுவால் இந்த துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக முன்னதாக தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே, 22 வயதான குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (7)

# ஐ.தே.முன்னணிக்குள் பதவிகளைப் பெறுவதே இ.தொ.காவின் இலக்கு

## வேலுகுமார் காட்டம்

(நாவலப்பிட்டி)
ஐக்கிய தேசிய முன்னணிக்குள் நுழைந்து, பதவிகளைப் பெற்றுவிட வேண்டும் என்பதே இ.தொ.காவின் இலக்கென ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் வேலுகுமார் எம்.பி.தெரிவித்துள்ளார்.



அத்தோடு அரசியல் இலாபங்களுக்காக, பெருந்தோட்டத் தொழிலாளர்களை பணயம் வைத்து இ.தொ.கா., தொழிற்சங்க பிழைப்பு நடத்துவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

நாவலப்பிட்டிய ரிலாகல பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நடேசன்புரம் வீடமைப்புத் திட்டத்தின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இம்முறை விடுதலை பெற்றுக்கொடுத்து விட்டது போல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மார்தட்டுகின்றது.

தமது கட்சியே மலையக மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற தொனியிலும் அக்கட்சியின் உறுப்பினர்களால் மலையகத்தில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

90 காலப்பகுதியிலேயே கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆரம்பம் முதல் நியாயமான விகிதத்தில் சம்பள உயர்வை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுக்கொடுத்திருக்குமானால் தற்போது அடிப்படைச் சம்பளம் 1000 ரூபாய்க்கும் அதிகமாக வழங்கப்பட்டிருக்கும்.

ஆனால், குறுகிய அரசியல் இலாபங்களுக்காகவும், குறுக்கு வழி அரசியலுக்காகவும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை பணயம் வைத்து தொழிற்சங்க பிழைப்பு நடத்திய இ.தொ.கா. நியாயமான சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்கவில்லை" எனக் குற்றம் சாட்டியுள்ளார். (இ-7)

# பொலிஸாரை அவமதித்து முகநூலில் பதிவு செய்த இளைஞர் ஒருவர் கைது

(பிட்டிகல)
பிட்டிகல பொலிஸ்நிலைய அதிகாரிகள் மற்றும் அனைத்து இலங்கை பொலிஸாரையும் அவமதிக்கும் வகையில் முகநூலில் கருத்துக்களைப் பதிவிட்ட இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி முகநூல் கணக்கு ஊடாக பிட்டிகல பொலிஸ் நிலைய அதிகாரிகளை தரக்குறைவான வார்த்தைகளால் பயன்படுத்தி குறித்த இளைஞர் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

பின்னர் பொலிஸ் அதிகாரிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 22 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். (7)

# பொலிஸ் பரிசோதகர் மறியலில்

(காலி)
காலி - ரத்கமயில் வர்த்தகர்கள் இருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தென் மாகாண விஷேட விசாரணைப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் கபில நிசாந்தவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்தச் சம்பவம் தொடர்பில் தென் மாகாண விசேட விசாரணை பிரிவின் பொலிஸ் பரிசோதகர் கபில நிசாந்தவை குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் கைது செய்திருந்தனர்.

ரத்கம - உதாகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ரசேன் சிந்தக மற்றும் 33 வயதுடைய மஞ்சுள அசேல ஆகியோர் கடந்த 23 ஆம் திகதி வான் ஒன்றில் வந்த குழு ஒன்றினால் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸ் உடையில் வந்த சிலர் அவர்களை கடத்திச் சென்றதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

அதனடிப்படையிலேயே சம்பவம் தொடர்பில் தென் மாகாண விஷேட விசாரணைப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் கபில நிசாந்த கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# செய்தித்துளிகள்

## திடீரென அதிகரித்த இலங்கை நிலப்பரப்பு!

(கொழும்பு)
இலங்கையின் நிலப்பரப்பினை அளவிடும் நடவடிக்கையினை மீண்டும் நில அளவைத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

அண்மையில் துறைமுக நகரம் மற்றும் மொரகஹகந்த மற்றும் களு கங்கை ஆகிய திட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இலங்கையின் நிலப்பரப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அளவீடு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக நில அளவைத் திணைக்களத்தின் ஜெனரல் பீ.எம்.பீ.உதயகண்ணா தெரிவித்துள்ளார்.

சமகாலத்தில் இலங்கையின் நிலப்பரப்பு 65610 சதுர கிலோ மீற்றர்களாக காணப்படுகின்றது. எனினும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள இலங்கையின் புதிய அளவீட்டில் நூற்றுக்கணக்கான கிலோமீற்றர்கள் அதிகரிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

அளவீட்டு நடவடிக்கையை மார்ச் மாதம் இறுதியில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (7)

## ஆட்டோ-டிப்பர் விபத்து இருவர் உயிரிழப்பு

(நாவலப்பிட்டி)
நாவலப்பிட்டி, கம்பொல பிரதான வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற ஆட்டோ மற்றும் டிப்பர் வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்தில் ஆட்டோ சாரதியும் அதில் பயணஞ் செய்த நபரொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கம்பொலவிலிருந்து கினிகத்தேன நோக்கி பயணஞ் செய்த குறித்த ஆட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து டிப்பருடன் மோதுண்டதனால் விபத்து நேர்ந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (7)

## எரிபொருள் நிலையத்தில் கொள்ளை

(மாத்தளை)
மாத்தளை - வரகாமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு உந்துருளியில் வந்த இனந்தெரியாத இரண்டு பேர் அங்கிருந்து பணத்தினை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முழுமையாக முகத்தை மூடிய தலைக்கவசங்களுடன் வந்த குறித்த இருவரும் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பணியாளர்களை துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தி இந்த கொள்ளையை மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

. சுமார் 50 ஆயிரம் ரூபா கொள்ளையிட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 70 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 60 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 180 | 160 | 200 |
| தக்காளி | 50 | 30 | 50 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 110 | 90 | 40 | 80 |
| கோவா | 50 | 30 | 50 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 100 | 85 | 120 |
| பூசணி | 40 | 30 | 30 | 35 | 40 |
| புடோல் | 50 | 50 | 50 | 35 | 60 |
| வாழைக்காய் | 60 | 90 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 50-150 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 75 | 80 |
| பாகற்காய் | 80 | 120 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 70 | 40 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 50 | 40 | 100 |
| பயற்றங்காய் | 140 | 120 | 100 | 60 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 30 | 30 | 40 | 40 | 50 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 75 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 | 400 | 500 |
| போஞ்சி | 50 | 60 | 80 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 40 | — | 50 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 50 | 80 | 80 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 30-50 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 140 | 60 | 100 | 130 |
| வெங்காயப்பூ | 50 | 60 | 50 | 60 | 120 |
| முள்ளங்கி | 30 | 50 | 40 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 30 | 15 | 20 |
| ஈரப்பலா | — | 100 | 60 | 100 | 80 |




# மாம்பழக் குரங்கு!



ஒரு ஊரில் ஒரு அழகான மலை. மலை மேல் ஒரு முருகன் கோயில். கோவிலுக்குச்செல்லும் வழியெல்லாம் நிறையக் கடைகள் இருந்தன. அங்கே ஒரு வியாபாரி மாம்பழங்களைக் கொட்டி கடை வைத்திருந்தான். பக்கத்து மரத்திலிருந்த ஒரு குரங்கு அதைப் பார்த்தது. அந்தக் குரங்கு இதுவரை மாம்பழம் பார்த்ததே இல்லை.

முதல் முறை மாம்பழத்தைப் பார்த்ததும் அதற்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. குரங்கு கடைக்காரனை பார்த்து "இது என்ன பழம்?" என்று கேட்டது. "இதன் பெயர் மாம்பழம்" என்றான் கடைக்காரன்.

"எனக்கு ஒரு மாம்பழம் சாப்பிடக் கொடு" என்று கேட்டது குர்ங்கு.

"சும்மா எல்லாம் கொடுக்க முடியாது. ஒரு பழம் பத்து ரூபாய். காசு கொடுத்தால்தான் பழம் கொடுப்பேன்" என்றான் கடைக்காரன்.

குரங்குக்கு மாம்பழம் சாப்பிட வேண்டும் என்ற ஆர்வம் கூடிக்கொண்டே போனது. "என்னிடம் காசு கிடையாது", " நான் கட்டில் வாழும் குரங்கு. எனக்கு ஒரு பழம் இலவசமாகக் கொடுக்கக் கூடாதா?" என்று குரங்கு கேட்டது.

"அதெல்லாம் முடியாது. காசில்லாவிட்டால் ஒரு பழம் கூடக் கிடையாது" என்றான் கடைக்காரன்.

குரங்குக்கு மிகவும் சோகமாகப் போய் விட்டது. குரங்குக்கு ஒரே அழுகையாக வந்தது. அது ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தது.

குரங்கின் அழுகுரல் கேட்டு அங்கே தியானத்தில் ஆழ்ந்திருந்த ஒரு சித்தர் கண் விழித்தார்.

அவர் அந்தக் குரங்கிடம் "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். குரங்கு நடந்ததைக் கூறியது.

உடனே அந்தச் சித்தர் தனது பணப்பையில் தேடி ஒரு பத்து ரூபாவை எடுத்து அந்தக் கடைக்காரனிடம் கொடுத்து ஒரு நல்ல மாம்பழம் வாங்கினார்.

அதைக் குரங்கிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னார்.

குரங்கிற்கு ஒரே மகிழ்ச்சி. அது அந்த மாம்பழத்தைச் சாப்பிட ஆரம்பித்தது.

மாம்பழச் சுவையில் குரங்கு மயங்கிப் போயிற்று.

"ஆகா, இதுபோன்ற சுவையான பழத்தை இதுவரை சாப்பிட்டதே இல்லை" என்றது.

அப்போது சித்தர் "இது போன்ற மாம்பழம் உனக்கு தொடர்ந்து கிடைக்க நான் வழி சொல்லட்டுமா?" என்று கேட்டார்.

அதைக் கேட்ட குரங்கு மிகவும் மகிழ்ச்சி அடைந்து "ஐயா, சொல்லுங்கள்" என்று கேட்டது.

"இங்கு மாம்பழம் வாங்கும் எல்லோரும் மாம்பழம் சாப்பிட்டு விட்டு விதையை இங்கேயே போட்டு விட்டுச் சென்று விடுவார்கள்.

நீ அதை எல்லாம் கொண்டு போய் மலை மேல் நட்டு தண்ணீர் ஊற்றி வந்தால் அதில் மாஞ்செடி முளைக்கும். மாஞ்செடி பிறகு வளர்ந்து மாமரமாக மாறும். பிறகு அதில் நிறைய மாம்பழம் பழுக்கும். அவற்றை நீங்கள் அனைவரும் பறித்துச் சாப்பிடலாம்" என்றார் சித்தர்.

இதைக் கேட்ட குரங்கு, அனைவரும் சாப்பிட்டுவிட்டுப் போட்ட விதைகளைப் பொறுக்க ஆரம்பித்தது. இதைப் பார்த்த மற்றக்குரங்குகள் "நீ என்ன செய்கிறாய்?" என்று கேட்டன.

"நான் இந்த விதைகளை நமது மலை மேல் கொண்டு சென்று நடப் போகிறேன்" என்றது.

"எல்லோரும் சாப்பிட்டு விட்டு எச்சில் படுத்திய விதைகளை ஏன் பொறுக்குகிறாய்?" என்று மற்றக் குரங்குகள் கேட்டன.

"அதனால் பரவாயில்லை. நமக்கு பிற்காலத்தில் நல்ல மாமரம் வளர்ந்து நல்ல மாம்பழங்கள் கிடைக்கும்" என்றது குரங்கு.

இதைக் கேட்ட மற்றக் குரங்குகளும் கீழே கிடந்த எல்லா மாம்பழ விதைகளையும் பொறுக்கி மேலே கொண்டு சென்று போய் நட்டன.


சில வருடங்களில் அந்த மலை உச்சி பெரிய மாந்தோப்பாக மாறியது. அங்கே நிறைய மாம்பழங்கள், மாங்காய்கள் குரங்குகளுக்குக் கிடைத்தன. குரங்குக்கு மாம்பழம் வாங்கிக் கொடுத்த சித்தர் சிறிது காலம் பல ஊர்களுக்குச் சென்று திரும்பி வந்தார். அவர் அந்த மாந்தோப்பை பார்த்து ஆச்சர்யப்பட்டு அந்த தோப்பிற்குள் சென்றார். அப்போது அந்த தோப்பிற்கு காவல் காத்துக் கொண்டிருந்த காவல் குரங்குகள் அவரை அடையாளம் கண்டு கொண்டு வணங்கின. அவரை தலைவர்குரங்கிடம் அழைத்துச் சென்றன.

அவரைப் பார்த்து தலைவர் குரங்கு, "ஐயா, நீங்கள் கொடுத்த ஆலோசனையினால் நாங்கள் இவ்வளவு பெரிய தோப்பை உருவாக்க முடிந்தது" என்றது. "என்னதான் நான் அறிவுரை கூறினாலும் நீங்கள் அதை கேட்டு செயற்பட்டது மிகவும் சந்தோசம்" என்றார் சித்தர்.

அவர் அந்தத் தலைவர் குரங்கைப் பார்த்து "நீ உன் கூட்டத்துடன் இணைந்து இவ்வளவு பெரிய மாந்தோப்பை உருவாக்கியதால் நீ இன்றிலிருந்து "மாம்பழக்குரங்கு" என்று அழைக்கப்படுவாய்" என்று ஆசீர்வதித்தார்.

அவர் ஆசியை பெற்று, மாம்பழக்குரங்கும் அதன் கூட்டமும் மிகவும் சந்தோசமாக அந்த மாந்தோப்பில் வாழ்ந்து வந்தன.

# தென்னைமரத்து இளநீர்



தென்னை மரத்து இளநீரு -நல்ல
தேன்போல இனிக்கும் சுவைநீரு
என்றும் எங்கும் கிடைத்திடுமே -தினம்
ஏற்றுக் குடித்தால் நலம் தருமே!

இயற்கை தந்தது இளநீரு -நல்ல
இன்சுவை தந்திடும் இளநீரு
உடலின் வெப்பம் தணித்திடுமே -நம்
உள்ளம் தனிலே நிறைந்திடுமே!

பானத்தில் இளநீர் அரியவகை -எந்த
காலமும் நமக்கு நல்ல துணை
விலையோ ஒன்றும் அதிகமில்லை -இங்கு
இதுபோல் பானம் வேறு இல்லை.

கொத்துக் கொத்தாய் காய்த்திடுமே -நம்
அனைவரின் தாகம் தீர்த்திடுமே!
அனைவரும் நாளும் குடித்திடலாம் -வரும்
ஆனந்தம் தனிலே திளைத்திடலாம்!

# பொது அறிவு

- காவல் துறையில் முதன்முதலில் பெண்களைச் சேர்த்த நாடு எது?

**பிரிட்டன்**

- மர்ஜென்சியின் விளைவுகளை கண்டறிய அமைக்கப்பட்ட கமிஷன் எது?

**ஷா கமிஷன்**

- சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தை விசாரிக்க அமைக்கப்பட்ட கமிஷன் எது?

**நானாவதி கமிஷன்**

- நாட்டின் முதல் ஊழல் குற்றச்சாட்டான முந்த்ரா ஊழலை விசாரிக்க அமைக்கப்பட்ட கமிஷன் எது?

**சாக்ளா கமிஷன்**

- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பற்றி கண்டறிய அமைக்கப்பட்ட கமிஷன்கள் எவை?

**ஷாநவாஸ் கமிஷன், கோஸ்லா கமிஷன், ஜஸ்டிஸ் முகர்ஜி கமிஷன்**

பொய்கள் மூன்று வகைப்படும். ஒன்று புளுகு. இரண்டாவது அண்டப்புளுகு மூன்றாவது புள்ளி விபரங்கள்.
– மார்க் ட்வெய்ன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## விசாரணை நடத்தப்படாமல் விடுவதும் குற்றமே!

கொலை செய்தவரைவிட கொலை செய்யத் தூண்டியவரை முதற்தரக் குற்றவாளியாக இனங்கண்டு தீர்ப்பு வழங்கப்பட்ட சம்பவங்கள் நிறையவே உண்டு.

ஆக, குற்றம் இழைத்தவர் மட்டுமே குற்றவாளி என்ற வரையறைகள் எதுவும் இல்லை.

குற்றம் செய்யத் தூண்டியவர் – கட்டளையிட்டவர் – திட்டம் தீட்டியவர் என்ற வரிசையில் குற்றவாளியை மறைத்து வைத்திருத்தல் – செய்யப்பட்ட குற்றத்தை உரிய தரப்புக்குத் தெரிவிக்காமை போன்றவையும் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

அந்த வகையில் இலங்கையில் 2004ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையான மகிந்த ராஜபக்ஷ தரப்பின் ஆட்சிக் காலத்தில் போர்க்குற்றம் இடம்பெற்றது என்பதை இந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கப்படுத்தியுள்ளார்.

2004ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் போர்க்குற்றம் இழைக்கப்பட்டது என இந்த நாட்டின் பிரதமர் கூறியிருக்கும்போது, போர்க்குற்ற விசாரணை செய்யப்பட வேண்டும் என்பது இயல்பாகவே ஏற்பட வேண்டியதாகும்.

இதற்கு மேலாக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களும் போர்க்குற்றம் நடந்தது பற்றி இந்தியாவில் வைத்துக் கூறியிருப்பதுடன் சர்வதேச போர்க்குற்ற விசாரணை முன்னெழுமாக இருந்தால், அதற்கு இந்தியா தனது ஒத்துழைப்பை வழங்கும் எனத் தான் நம்புவதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஆக, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க்குற்றம் நடந்துள்ளதை நாட்டின் பிரதமரும் முன்னாள் ஜனாதிபதியும் சமநேரத்தில் பகிரங்கப்படுத்தியிருப்பது சர்வதேச போர்க்குற்ற விசாரணையை நடத்துவதற்கும் போதுமான ஆதாரமாகும்.

எனவே சர்வதேச போர்க்குற்ற விசாரணை உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற தார்மீகப் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் தமிழ் மக்கள் பேரவை, சிவில் சமூக அமைப்புகளின் தார்மீகக் கடமையாக இருக்கும்.

ஏலவே சர்வதேச போர்க்குற்ற விசாரணை முடிந்துவிட்டது என்று கூறியவற்றையெல்லாம் ஒருபுறம் வைத்து விட்டு, தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற கோசத்தோடு சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்துவது கட்டாயமானதாகும்.

சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவது ஒன்றுதான் இலங்கை நாட்டில் தமிழ் மக்களுக்கான எதிர்காலப் பாதுகாப்பாக இருக்கும்.

ஆகையால் சர்வதேச போர்க்குற்ற விசாரணையை ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஒன்றுதிரண்டு வலியுறுத்துவது காலத்தின் அவசர தேவையாகும்.

# இனப்படுகொலையை அரசு மறப்போம் மன்னிப்போம் எனக் கூறுவது வேடிக்கையானது – அனந்தி சசிதரன்

யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்களாகியும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியையோ வழங்கத் தயாரில்லாத இலங்கை அரசாங்கம் தற்போது இனப்படுகொலையை மறப்போம் மன்னிப்போம் எனக் கூறுவது வேடிக்கையானது. பிரதமரின் இக் கூற்றை தமிழ் மக்கள் ஏற்கத் தயாரில்லை எனவும் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச் செயலாளரும் வடக்கு மாகாண முனனாள் அமைச்சருமான அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இனப்படுகொலையை மறப்போம் மன்னிப்போம் என பிரதமர் கூறியபோது அங்கிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மௌனமாக இருந்துவிட்டு இப்போது மக்கள் முன் நாடகமாடுவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் அமைந்துள்ள தனது வீட்டில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கிற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கத்தக்கதாகவே இனப்படுகொலையை மறப்போம் மன்னிப்போம் எனக் கூறியுள்ளார். அவ்வாறு பிரதமர் கூறியபோது வேடிக்கை பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்த கூட்டமைப்பினர் இப்போது மக்கள் மத்தியில் வந்து நாடகமாடுகின்றனர்.

ஜெனிவா அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் அடுத்து வரும் தேர்தல்களை இலக்காக வைத்துமே பிரதமர் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார் என்பதே உண்மையானது.

தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டும் காணாமலாக்கப்பட்டும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் இருக்கின்ற நிலையில் அவை தொடர்பில் நீதியான விசாரணையொன்று முன்னெடுக்கப்பட வேண்டுமென்றே வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனாலும் விசாரணைகளை மேற்கொள்ளாது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்காது மறப்போம் மன்னிப்போம் என்று பிரதமர் கூறுவது வேடிக்கையானது. அவ்வாறு பிரதமர் தனக்கு தேவையானதை தேவையான நேரத்தில் கூறுகின்ற போது அவருக்குத் துணையாகவும் அவருடைய கருத்துக்களையும் செயற்பாடுகளையும் ஒத்து ஊதுபவர்கள் போன்று கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர்.

போர்க்குற்றம் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புகூறலை செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்க வேண்டும். இதனைச் செய்யாமல் நல்லிணக்கம் என்பது ஏற்பட முடியாது. ஆகவே இனப்படுகொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு நீதியை வழங்க வேண்டுமென்பதே எங்களது கோரிக்கையாகும்.

இதேவேளை கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இரு தரப்பிலும் குற்றங்கள் இழைத்ததாக கூறுகின்றார்.

அவர் உண்மையை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இந்த நாட்டில் அழிக்கப்படும் மக்களைப் பாதுகாப்பதற்காக தற்காப்பு என்ற அடிப்படையில் விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்றது. அவர்கள் மக்களை எதுவும் செய்ய வில்லை. அவர்களது தியாகம் போற்றுதற்குரியது என்றார். (ம-89)

# மகன் உயிரிழந்த சோகம் தாங்க முடியாமல் தாய் உயிர்மாய்ப்பு

## மாந்தை கிழக்கில் சோகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் மகன் உயிரிழந்த சோகம் தாங்க முடியாத தாய் தற்கொலை செய்து கொண்ட பெரும்சோகச சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சிராட்டிகுளம் பகுதியில் இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யோகராசா சரஸ்வதி என்ற தாயாரே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கடந்த முறை க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றிய மாணவனான யோகராசா துசியந்தன் தொடர்ச்சியாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிககப்பட்டு வந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவனின் சடலம் நேற்று அதிகாலை 2 மணிக்கு சிராட்டிகுளம் பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மகனது பிரிவை தாங்க முடியாத தாயார் நேற்று அதிகாலை 5 மணியளவில் வீட்டிலிருந்து சுமார் 800 மீற்றர் தொலைவில் உள்ள வனப்பகுதியில் சென்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஏற்கெனவே ஒரு மகனை பறிகொடுத்த தாய் தனது இரண்டாவது பிள்ளையையும் பறிகொடுத்த தாக்கத்தை தாங்க முடியாத யோகராசா சரஸ்வதி என்ற தாயாரே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஒரே வீட்டில் இரு மரணங்கள் காரணமாக அந்தப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் சோகத்தினை ஏற்படுத்தியுள்ளது. (ம-315)

# கிளிநொச்சி அக்கராயன் பகுதியை புதிய பிரதேச செயலகமாக மாற்ற அமைச்சரவை அங்கீகாரம் – சிறீதரன்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன் பிரதேசத்தை தனியான புதிய பிரதேச செயலகமாக உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர்சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக அப்பிரதேச மக்கள் வைத்த கோரிக்கைக்கமைய புதிய தனியான பிரதேச செயலகமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை அச்சுவேலி, கொடிகாமம் ஆகிய பிரதேசங்களையும் தனியான பிரதேச செயலகங்களாக உருவாக்குவதற்கான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (ம-10)

# திறன் வகுப்பறைத் திறப்பு

வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலயத்தின் திறன் வகுப்பறைத் திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக நலன் விரும்பி தம்பு செல்வகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் நாவற்குழி கேரதீவு வீதி, தச்சன்தோப்பு, கோகிலாக்கண்டி, கோகிலாக்கண்டித்துறை, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பெரியகரைசல் பிரதேசம் பரப்பாங்கண்டல், ஆண்டாங்குளம், வட்டக்கண்டல், குருவில், கண்ணாட்டி, பள்ளிவாசல்பிட்டி, பரப்புக்கடந்தான் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## ஆன்மீகச் சிந்தனைகள்

### பக்திக்கு வேண்டாம் பணம்

- மூட்டைப் பூச்சியைப் போல் பிறரைத் துன்புறுத்தி வாழக்கூடாது. எலியைப்போலத் திருடி வயிறு வளர்க்கக் கூடாது. கரையான்களைப் போல் பிறர் பொருளை நாசப்படுத்தி வாழக்கூடாது. தேனீயைப் போலவும், எறும்பைப் போலவும் உழைத்து உண்ணுவதே அமைதியான வாழ்க்கை.
- நல்ல நூல்களை சிரமப்பட்டு படிக்க வேண்டும். உயர்ந்தோருடன் பழக வேண்டும். ஆசிரியருக்குப் பணிவிடை செய்யவேண்டும். இதையெல்லாம் செய்யாமல், ஞானமும் கல்வியும் பெற வேண்டுமென்றால், ஒரு பெண் தன் கணவனைக் கொன்றுவிட்டுப் பிள்ளை வரம் கேட்ட கதை போலாகும். நல்லாசிரியன் ஒருவனை நாடிப்பெறும் கல்வியே ஞானத்தை கொண்டதாகும்.
- குடும்பம் மரத்தைப் போன்றது. அதற்கு வேர் மனைவி, அடிமரம் கணவன், கிளைகள் குழந்தைகள். பலவித பறவைகளுக்கும் மனிதர்களுக்கும் நிழல் தந்து; மரம் உறைவிடமாக உதவுவது போல், குடும்பத்தில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டும்.
- நல்ல உணவுகளை உண்பதால் உடல் வளரும். நல்ல நூல்களைப் படிப்பதால் உணர்வு வளரும். நல்ல உள்ளத்துடன் சதா இறைவனை நினைப்பதனால் உயிர் வளரும். இம்மூன்றும் வாழ்வின் அத்தியாவசியத் தேவைகள்.
- எப்போதும் இறைவனின் நினைவு வேண்டும். அது முடியவில்லையானால் எழுகின்ற போது, சாப்பிடும் போது மற்றும் படுக்கும் போதாவது நினைக்க வேண்டும்.

# அவுஸ்திரேலியத் தொடரில் ராகுல் தேர்வுக் குழுத் தலைவர் விளக்கம்



மூன்றாவது தொடக்க வீரர் தேவை என்பதாலேயே கே.எல்.ராகுல் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தேர்வுக்குழுத் தலைவர் எம்.எஸ்.கே. பிரசாத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுடனான ஒருநாள் மற்றும் இருபது-20 தொடருக்கான அணியில் கே.எல்ராகுல் சேர்க்கப்பட்டார்.

சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்து சில நாட்கள் போட்டியில் ஒதுக்கி வைக்கப்பட்ட கே.எஸ்.ராகுல் பின் மன்னிப்புக் கோரி இந்திய அணியில்சேர்க்கப்பட்டார். இந்நிலையில் அவுஸ்திரேலிய இருபது-20 போட்டியில் சேர்க்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல விமர்சனங்கள் உருவாகின.

இதுகுறித்து விளக்கம் அளித்துள்ள இந்திய கிரிக்கெட் அணி தேர்வுக் குழுத் தலைவர் எம்.எஸ்.கே. பிரசாத். உலகக் கோப்பை போன்ற பெரிய தொடரில் மூன்றாவதாக ஒரு தொடக்க ஆட்டக் கார வீரர் கட்டாயம் தேவை என்பதாலே ராகுல் சேர்க்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். (க)

# நாங்கள் விளையாடும் போது அவர்கள் எல்லையில் நிற்கிறார்கள்

## இறந்த ராணுவ வீரர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்குவதாக சமி உறுதியளிப்பு



புல்வாமா தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த சி.ஆர்.பி.எஃப் வீரர்களின் குடும்பத்தினருக்கு, இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி நிதியுதவி அளிப்பதாக உறுதியளித்துள்ளார்.

தீவிரவாத கொடூர தாக்குதலில் உயிரிழந்த ஒவ்வொரு சி.ஆர்.பி.எஃப் வீரர்களின் குடும்பத்துக்கும் தலா ரூ.5 இலட்சம்வழங்குவதாக வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், 'இந்திய அணிக்காக நாங்கள் விளையாடும் போது நமது பாதுகாப்புக்காக இராணுவ வீரர்கள் தான் எல்லைப் பகுதிகளில் துணை நிற்கின்றனர். தற்போது அவர்கள் குடும்பத்தினருக்கு பாதுகாப்பாக நாம் அனைவரும் இருக்க வேண்டியது அவசியம் என தெரிவித்துள்ளார்.

மேலும், சி.ஆர்.பி.எஃப் வீரர்களின் குடும்பங்களுக்கு உதவி தேவைப்படும்போதெல்லாம் தான் துணை நிற்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

முன்னதாக, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான சேவாக் வீரர்களின் குழந்தைகளின் முழுக் கல்விச் செலவையும் ஏற்றுக்கொள்வதாகவும், தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவான் வீரர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி அளித்தார்என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# விக்ராந்தைப் பாராட்டிய ரவிச்சந்திரன் அஸ்வின்



தமிழ் நடிகர் விக்ராந்த் நேற்று முன்தினம் நடந்த போட்டி ஒன்றில், 92 பந்துகளில் 107 ஓட்டங்கள் குவித்ததை சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் வியந்து பாராட்டியுள்ளார்.

கிரிக்கெட்டில் மிகுந்த ஆர்வமுடைய தமிழ் நடிகர்களில் விக்ராந்தும் ஒருவர். CCL எனும் செலிபிரிட்டி கிரிக்கெட் லீக்கில் சென்னை ரைனோஸ் அணிக்காக விளையாடி ரசிகர்கள் பட்டாளத்தை கொண்டவர் விக்ராந்த். இந்நிலையில், தமிழ்நாடு கிரிக்கெட் அசோஸியேஷன் நடத்தும் டிவிஷன் தொடரில் விக்னேஸ்வரா கிரிக்கெட் கிளப்பிற்காக விக்ராந்த் விளையாடி வருகிறார்.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் விக்ராந்த் அதிரடியாக விளையாடி 92 பந்துகளில் 107 ஓட்டங்கள் குவித்து வியக்க வைத்தார். விக்ராந்தின் சதத்தால் விக்னேஸ்வரா அணி வெற்றி பெற்றது. இவரது அபார ஆட்டத்தை பலரும் டுவிட்டரில் பாராட்டி வருகின்றனர்.

இந்திய கிரிக்கெட் அணி வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் தனது டுவிட்டர் பக்கத்தில், 'என்ன ஒரு மனிதர், எங்கள் அணிக்கு கைதட்டுவதற்கான நேரம்' என தெரிவித்துள்ளார்.

விக்ராந்த் திரைப்படங்களில் நடித்துக் கொண்டே, தனக்கு மிகவும் பிடித்த கிரிக்கெட்டிலும் கவனம் செலுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஹொக்கிப் போட்டி வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலக அணி சம்பியன்



முதலாம் இடம் சங்கானைப் பிரதேச செயலக அணி



இரண்டாம் இடம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி

பிரதேச செயலக மாவட்ட மட்ட ஹொக்கி போட்டிகள் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலக ஹொக்கி அணியை எதிர்த்து வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஹொக்கி அணி மோதியது. இறுதி வரை கோல்கள் எதையும் பெறமுடியாத காரணத்தால் தண்ட உதை மூலம் வெற்றியாளர் தீர்மானிக்கப்பட்டது. 3:2 என்ற அடிப்படையில் சங்கானை பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஹொக்கி அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது. (க)

# தென்னாபிரிக்காவுக்கான ஒருநாள் தொடர் மீண்டும் தலைவராகின்றார் லசித் மலிங்க



தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இலங்கை கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. தற்போது இரு அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. டர்பனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் குசல் பெரேராவின் அதிரடி ஆட்டத்தால் இலங்கை அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

2 ஆவது டெஸ்ட் போர்ட் எலிசபெத்தில் நாளை 21 ஆம் திகதி நடக்கிறது. அதன் பின் மார்ச் 3ஆம் திகதி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடக்கிறது.

இந்த தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் லசித் மலிங்க அணித்தலைவராக தொடரவுள்ளார்.

அணியில்மீண்டும்உடான மற்றும் தனஞ்செயா சேர்க்கப்பட்டுள்ளனர். இலங்கை அணி விபரம்,

மலிங்க, பெர்னாண்டோ, தரங்க, டிக்வெல்ல, குசல் பெரேரா, குசல் மெண்டிஸ், டி சில்வா, திசர பெரேரா, தனஞ்செய, ஏ. பெரேரா, ஓ பெர்னாண்டோ, கே. மெண்டிஸ், உடான, வி. பெர்னாண்டோ, கே. ரஜித, சண்டகன். (க)

# அரையிறுதிக்கு முன்னேறியது வளர்மதி விளையாட்டுக்கழகம்



அசத்தல் வெற்றியுடன் அரையிறுதிக்கு முன்னேறியது வளர்மதி விளையாட்டுக்கழக அணி. அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழக திருகுமரன்-லஜிதன் ஞாபகார்த்தமாக நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக்கழக மோதியது.

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம்முதல்இரண்டு சுற்றுக்களை இலகுவாக கைப்பற்றியது. மூன்றாவது சுற்றில் புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் அதிரடி காட்ட தொடங்கியது. போட்டி விறுவிப்பான கட்டத்தை அடைய வீரர்களுக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட புத்தூர் சென்றல் விளையாட்டுக்கழக வீரருக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டு எச்சரிக்கை விடப்பட்டது. இறுதிநேரத்தில் மீண்டும் அசத்தல் ஆட்டத்துடன் வளர்மதி விளையாட்டுக்கழகம் 3:0 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் சிறந்த வீரர்- நிகேதன். (க)

## சீமெந்தின் விலை...

ரூபாய் விலை அதிகரிப்பைச் செய்துள்ளது.

இலங்கையில் டொலருக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக அந்நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (ம-10)

## போதையை பயன்...

பொருளை இல்லாதொழிக்கும் என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

தங்காலையில் நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய சில கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

கொக்கைன் பயன்படுத்தும் அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்தால் அது பற்றி பகிரங்கமாக அறிவிக்கப்பட வேண்டும். பாராளுமன்றில் இருக்கும் அனைவருக்கும் எதிராகவும் குற்றம் சுமத்த முடியாது.

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அனைவருக்கு எதிராகவும் இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அமைச்சரவையில் அங்கம் வகிப்போர் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

கொக்கைன், போதைப் பொருள் பயன்படுத்தும் அரசாங்கமொன்று எவ்வாறு கொக்கைன் போதைப் பொருளை இல்லாதொழிக்க முடியும்?

தற்பொழுது இடம்பெறும் சம்பவங்கள் 89-90களில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு நிகரானது. அந்தக் காலத்தில் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் செய்யப்பட்டனர்.

தற்பொழுதும் இவ்வாறான காணாமல் போதல் சம்பவங்கள் பதிவாகத் தொடங்கியுள்ளன. அரசாங்கம் இதற்கு பொறுப்பு சொல்ல வேண்டும். இதிலிருந்து விடுபட முடியாது. அரசாங்கம் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கும் நாம் தயார். எந்தவொரு தேர்தலையும் எதிர்நோக்கத் தயார் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-3)

## இந்தியாவின் 50...

மையாக இருக்கலாம் என தோன்றுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் எதிர்கால நலன்களுக்காக தீர்மானங்களை எடுப்பதற்கு பதிலாக சில அமைச்சர்கள் தமது நலன்களுக்காக மாத்திரம் தீர்மானங்களை எடுக்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுசில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வட மாகாணத்திற்கு விஜயம் செய்தார். அங்கு பல்வேறு கருத்துக்களை வெளியிட்டார். பலாலி விமான நிலையம் ஏ320, 321 ரக விமானங்கள் வந்து போகும் சர்வதேச தரம் வாய்ந்த விமான நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும் என்றார்.

மன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு மீண்டும் கப்பல் மற்றும் படகு சேவை ஆரம்பிக்கப்படும் எனவும் கூறினார். வட பகுதி மக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை இவையா என நாங்கள் கேட்கின்றோம்.

30 ஆண்டுக்கால போரில் வீடுகளை இழந்த வடபகுதியை சேர்ந்த அப்பாவி மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க இந்தியா நிதியுதவி வழங்கியது. நான்கு வருடத்தில் ஒரு வீடாவது கட்டப்பட்டதா என நாங்கள் கேட்கிறோம். 50 ஆயிரம் வீடுகளில் ஒரு வீட்டை கூட நிர்மாணிக்காத ஐக்கிய தேசியக் கட்சி தற்போது வடக்கிற்கு சென்று சர்வதேச விமான நிலையம் பற்றி பேசுகிறது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி போரை முடிவுக்கு கொண்டு வந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வடக்கில் பாரிய அபிவிருத்தியை மேற்கொண்டது. வீதிகள் செப்பனிடப்பட்டன. புதிய பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. காங்கேசன்துறை வரை ரயில் பாதை நிர்மாணிக்கப்பட்டது. ஒன்றரை வருடங்களில் சகல வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன.

உலகத்திடம் கடனை பெற்று என்ன செய்தீர்கள் என்று எங்களிடம் கேட்கின்றனர். நாங்கள் செய்த பணிகள் காரணமாகவே பிரதமர் ஆடம்பர ரயிலில் யாழ்ப்பாணம் செல்ல முடிந்தது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை பார்த்தால் ரஞ்சன் ராமநாயக்க கூறிய விடயம் உண்மை என தோன்றுகிறது. கொக்கேய்ன் பயன்படுத்தியவர்களை போல அரசாங்கத்தின் அமைச்சர்கள் முடிவுகளை எடுக்கின்றனர் எனவும் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## கீரிமலை கடற்...

கரையில் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில். நீதிமன்ற உத்தரவின் பின்னர் சடலத்தை மீட்பதற்கான பணிகளை பொலிஸார் முன்னெடுக்கவுள்ளனர்.

40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவருடைய சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சடலம் கடலில் மிதந்து வந்ததா?, அல்லது நீராட சென்று உயிரிழந்தவருடையதா?, அல்லது கொலையா? எனும் கோணத்தில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3-9-10)

## ஐ.நாவிடம் அவ...

உறவினர்கள் சங்கத்தின் இணைப்பாளர் இவ்வாறு கேள்வியை எழுப்பியுள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் இணைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது. எங்களது போராட்டம் ஆரம்பித்து இரண்டு வருடங்கள் நிறைவு பெற்றுள்ளது. இதுவரைக்கும் காணாமல் ஆக்கப்பட்ட எங்களது உறவுகளுக்கு எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. கிளிநொச்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்திற்கு சில வருடங்களுக்கு முன் பிரதமர் ரணில் வருகை தந்திருந்த போது சொன்னார் மகிந்தவின் பிள்ளைகள் காணாமல் போயிருந்தால் அவர்கள் இப்படியிருப்பார்களா? எனவே நான் பதவிக்கு வந்தவுடன் உங்களுக்கு தீர்வை தருவேன் என்றார்.

இதன்போது பிள்ளை காணாமல் ஆக்கப்பட்ட தாய் ஒருவர் அவரின் காலில் வீழ்ந்து கதறி அழுதார் தனது ஒரேயொரு மகனை மீட்டுத்தருமாறு. ஆனால் பதவிக்கு வந்த ரணில் காணாமல் ஆக்கப்பட்ட எவரும் உயிரோடு இல்லை என யாழப்பாணத்திலும், மறப்போம் மன்னிப்போம் என கிளிநொச்சியிலும் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்வாறு தெரிவித்த போது எங்களது வாக்குகளால் பதவிக்கு வந்த பிரதிநிதிகள் வாய் மூடி மௌனமாக இருந்துள்ளனர். அது மாத்திரமன்றி கடந்த காலத்தில் நடந்து கொண்டது போன்று தற்போதும் இலங்கை விடயத்தில் ஐ.நாவுக்கு மேலும் கால அவகாசம் வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவித்த அவர்கள் நாம் இனியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை நம்பத் தயாரில்லை என்றும் தெரிவித்தனர்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை எதிர்வரும் 25ஆம் திகதி கிளிநொச்சியில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மதத்தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், நிறுவனம் சார்ந்த பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் அனைவரும் ஒன்றுகூடி இலங்கை அரசுக்கும், ஐக்கிய நாடுகள் சபைக்கும் மற்றும் சர்வதேச சமூகத்துக்கும் தமது நியாயமான கோரிக்கைகளை வெளிப்படுத்தி இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

அன்று மாபெரும் பேரணி ஏ9 வீதி ஊடாக நகர்ந்து கிளிநொச்சி டிப்போ சந்தியை அடைந்து இலங்கைக்கான ஐ.நா பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்படும்.

இந்த மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு வடபகுதியில் பூரண கதவடைப்புடன் கூடிய ஹர்த்தாலை அனுஷ்டிப்பதற்கு முழுமையான, உணர்வுபூர்வமான பங்களிப்பை வழங்குமாறு கிளிநொச்சி மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் கோரியுள்ளது. (ம-312)

## இன்று முதல் ஒரு...

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதி கருதி காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரைக்கும் மற்றும் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 2 மணி வரைக்கும் ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளது. (ம-3)

## சர்வதேச விமான...

அண்மையில் வடக்கு மாகாணத்திற்குச் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 20 பில்லியன் ரூபாய் செலவில் பலாலி விமான நிலையத்தை அனைத்துலக விமான நிலையமாக தரமுயர்த்தும் திட்டம் குறித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக பேசியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் றோகித அபேகுணவர்த்தன,

20 பில்லியன் ரூபாய் செலவில் பலாலி விமான நிலையத்தை அனைத்துலக விமான நிலையமாக தரமுயர்த்தும் திட்டம் மிகவும் ஆச்சரியம் அளிக்கிறது. மத்தல விமான நிலையம் அமைக்கப்பட்ட போது நாட்டுக்கு இரண்டாவது அனைத்துலக விமான நிலையம் தேவையற்றது என்று கூறியவர்கள், திடீரென யாழ்ப்பாணத்தில் பலாலி விமான நிலையத்தை தரமுயர்த்த முனைவது ஏன்?

மத்தல விமான நிலையம் பயன்படுத்தப்படாமல் இருக்கும் நிலையில், எதற்காக மூன்றாவது அனைத்துலக விமான நிலையம்? பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படுவதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் அனைத்துலக விமான நிலையங்கள் தொடர்பான அரசாங்கத்தின் முந்திய கொள்கைக்கும் தற்போதைய நிலைப்பாட்டுக்கும் இடையில் முரண்பாடு உள்ளது.

மத்தலவை விட பலாலி மிகவும் சிறந்தது என்றும், முதலீடுக்கு ஏற்ப சிறந்த வருவாய் கிடைக்கும் என்ற முடிவுக்கு அரசாங்கம் எப்படி வந்தது? வடக்கில் ஒரு அனைத்துலக விமான நிலையம் இருப்பது எப்போதுமே நல்லது. ஆனால் அது பொது நிதியை வீணாக்குவதை விட வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் ஒரு உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும்.

மத்தல விமான நிலையம் பெருமளவு நிதியைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டது. அந்த திட்டம் வெற்றியளிப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது.

பலாலியை அனைத்துலக விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு ஏற்படும் செலவை விட, மத்தல விமான நிலையத்தை சாத்தியப்படுத்துவது செலவு குறைவானதாக இருக்கக்கூடும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வீட்டை விட்டு தப்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் செ.ரஜீவ்காந் என்பவர் மீதே தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த உறுப்பினரின் வீட்டிற்கு நேற்று செவ்வாய்க்கிழமை மூன்று மோட்டார் சைக்கிளில் சென்ற ஆறுக்கும் மேற்பட்டவர்கள் வாள்களுடன் வீட்டிற்குள் புகுந்து உறுப்பினர் மீது தாக்குதலை மேற்கொள்ள முயற்சித்துள்ளனர்.

அதன் போது தாக்குதல் குழுவிடமிருந்து அவர் தப்பியோடியுள்ளார். அதனை அடுத்து சில நிமிடங்கள் குறித்த வாள் வெட்டுக்குழு வீட்டில் அட்டகாசம் புரிந்து விட்டு அங்கிருந்து விலகி சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில், உறுப்பினரால் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-101)

## கொக்குவிலில்...

கொக்குவில் கருவப்புலம் வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நான்கு மோட்டார் சைக்கிளில் வந்த எட்டுக்கும் மேற்பட்டவர்கள் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மதியம் அந்த வீட்டின் மீது பெற்றோல் குண்டுகளை வீசி தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது . வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹயஸ் வாகனம் ஒன்று , இரண்டு மோட்டார் சைக்கிள் என்பன முற்றாக தீக்கிரையாகியுள்ளன. அத்துடன் , வீட்டின் முன்பக்கத்தின் ஒரு பகுதியும் எரிந்துள்ளன.

வாகனங்கள் தீப்பிடித்து எரிந்ததை அடுத்து. வீட்டரால் யாழ்ப்பாணம் மாநகர சபை தீயணைக்கும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து. சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு படையினரால் வாகனங்களின் தீயினை கட்டுக்குள் கொண்டுவர முடியாத போதிலும், வீட்டின் மீது பரவிய தீயினை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவம் நடக்கும் போது வீட்டார் வீட்டினுள் இருந்த போதிலும் அவர்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. தாக்குதல் சம்பவம் தொடர்பில் வீட்டரால், கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-3-9-10-89-101)

## கூட்டரசாங்க...

டிருந்த போதிலும், விரைவாக பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியாத ஒரு நிலைமை காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

கூட்டரசாங்க யோசனை குறித்து கட்சித் தலைவர்களுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல் காணப்படுவதாகவும், பிரதமரின் முடிவின் பின்னர் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

தனியார் தொலைக்காட்சி செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறினார். (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2019/02/19
சீட்டிழுப்பு இலக்கம் 3859
ஆங்கில எழுத்து S வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 7 6 4 2 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 2040
ஆங்கில எழுத்து N வெல்லப்பட்ட இலக்கங்கள் 15 17 29 59
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 2019/02/19
சீட்டிழுப்பு இலக்கம் 163
ஆங்கில எழுத்து L வெல்லப்பட்ட இலக்கங்கள் 05 06 53 58
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/02/19
சீட்டிழுப்பு இலக்கம் 514
லக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 03 09 38 47 13
தேசிய லொத்தர் சபை

## விற்பனைக்குண்டு

- மின்சாரத்தில் இயங்கும் CAKEOVEN புதியது + பழையது இரண்டு.
- SPILL MIXER (மாசேர்க்கும் இயந்திரம் புதியது – ஒன்று)
- மற்றும் CAKE அச்சுக்கள் மற்றும் உபகரணங்கள் யாவும் புதியவை.

மேற்குறித்த அனைத்தும் அவுஸ்திரேலியாவில் இருந்து கொண்டு வரப்பட்டன.

**தொடர்புகளுக்கு : 076 195 8322, 076 561 0715** (7592)

## சாரதி தேவை

புத்தூர் கிழக்கு, மணியம் பில்டிங்கில் இயங்கும் ஸ்ரீ கௌதமன் ஹாட்வெயாரிற்கு சாரதி (ரைவர்) தேவை.

**உடன் தொடர்புகளுக்கு : 077 691 1089** (C-6443)

## காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தை தெற்குப்புற எல்லையாகக்கொண்ட இரண்டு (2) பரப்பு காணி உடனடி விற்பனைக்கு உண்டு.

(7594) **தொடர்புக்கு : 077 183 9214**

**குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ்களின் (Luxeary Bus Service கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு) ரூபாய் 1000 மட்டுமே. முன் கூட்டி பதிவு செய்பவர்களுக்கு மேலும் கட்டணம் குறைக்கப்படும்.**

**சேவைக் கட்டணம் 50/= அறவிடப்படும்**

**Discount Travels**

**யாழ்ப்பாணம் — கொழும்பு**

**தொடர்புகளுக்கு : 076 769 9191** (7598)

## மீண்டும் வெற்றிவழி A/L தமிழ் - தமிழிந்திரன்

- சகல பிரிவுக்கும்
- விடைகளுடன்
1. இலக்கணம்
2. குகப்படலம்
- A சித்திக்கு உத்தரவாதம்

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**

**077 284 8223** (7560)

## Study in LATVIA

**Schengen visa** (France, Germany, Italy, Norway, Poland, ...)

**ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு**

Admission open for 2019 Sep Intake



- ★ நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவரா?
- ★ IELTS இன்றி உயர் கல்வியினை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
- ★ கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
- ★ கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
- ★ 100% விசா உத்தரவாதம்.
- ★ குறைந்த பாட நெறி கட்டணம்
- ★ வேறு நாடுகளில் விசா நிராகரிக்கப்பட்ட மாணவர்களுக்கும் அனுமதி பெற்றுதரப்படும்.

(C-6652)

**100% Scholarship Available in ITALY**

iCS A Complete Visa Solutions
Study Abroad Expert

Admissions :- 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
( பெருமாள் கோவில் அருகாமையில் )
107 B 1/1 , Galle Road , Colombo 6

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS (C-6439)

- UK – 550 /=Kg
- கனடா – 900 /=Kg
- ஜேர்மனி – 700 /=Kg
- நெதர்லாந்து – 700 /=Kg

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

📞 0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## உடனடி வேலைவாய்ப்புக்கான அரிய சந்தர்ப்பம்

எமது நிறுவனத்தில் புதிய கிளைகளுக்கான முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் புதிதாக இணைக்கப்படவுள்ளனர். O/L, A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஏனையவர்களுக்கு அடிப்படை பயிற்சி நெறியுடன் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும்.

### புதிய கிளைகள் ஆரம்பிக்கப்பட உள்ள இடங்கள்

- வவுனியா (வவுனியா செட்டிக்குளம்)
- கிளிநொச்சி (கிளிநொச்சி பரந்தன்)
- மன்னார் (மன்னார் பேசாலை)
- முல்லைத்தீவு (முல்லைத்தீவு, மாங்குளம்)
- திருகோணமலை
- மட்டக்களப்பு
- அம்பாறை
- கண்டி

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ETF, EPF மற்றும் சுற்றுலா வசதிகள், மருத்துவ வசதிகள், மற்றும் தங்குமிட வசதிகள் பெற்றுத்தரப்படும். (விண்ணப்பிக்க விரும்பியவர்கள் முழுப் பெயர், தே.அ.அ. இலக்கத்தினையும் மற்றும் முகவரியினையும் இவ் இலக்கத்திற்கு 076 414 4030 SMS செய்யவும்)

தொடர்புகளுக்கு : 076 656 4030 (Manager), 077 006 4030 (7598)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

## சாய் லங்கா புத்தகசாலை

மருதனார் மடத்தில் (இராமநாதன் மகளிர் கல்லூரிக்கு முன்னால்) பாலர் முதல் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு வரையான நூல்கள் மேலும் பலவகை இலங்கை இந்திய வெளியீடுகள், காகிதாதிகள், எழுதுபொருட்கள், அலுவலக உபரணங்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**• 10 % தொடக்கம் 70 %**

**வரையான விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

**தொடர்புகளுக்கு - சாய் லங்கா புத்தக சாலை**

**இல.02, காங்கேசன் துறை வீதி, மருதனார் மடம், சுன்னாகம்.**


**T.P : 021 222 4858, 077 185 6010**

**Viber : 077 502 7767** (C-6558)

# மனமகிழ்ந்து

## வாழ்த்துகின்றோம்

**திரு. P.கமல்தாசன்** [J.P,SLPS, BA (cey), MEd (Hons), MA in Eco,PGDE, PGDM, Spl.Trd.Com]



இலங்கையின் பிரபல பொது அறிவு, நுண்ணறிவு விரிவுரையாளரும் அளவையியல் ஆசிரியரும், யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலய பிரதி அதிபரும் எமது நண்பருமான திரு.P.கமல்தாசன் அவர்கள் 11.02.2019ஆம் திகதி அன்று அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் பெற்றமையையிட்டு வாழ்த்துவதுடன் மேலும் பல பதவிகள் பெறவும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :**

**விஜய், தனேந்தி, நிரோஷ், பரமேஸ், தீபன், தமிழ், சிறி, பன்னீர், ராஜ்.**

**(நல்லூர் நண்பர்கள்)**

(7586)

# பாராட்டி

## வாழ்த்துகின்றோம்

**திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ்**

(BA (Hons), PGDE, MED, PGDM, SLPS-I)

எமது வித்தியாலயத்தின் முதல்வர் **திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ்** அவர்கள் இலங்கை கல்வியமைச்சின் பரிந்துரையின் பெயரில் 23.11.2015 இலிருந்து "இலங்கை அதிபர் சேவை தரம்-I" இற்கு பதவியுயர்வு பெற்றதையிட்டும் கடந்த 2018.12.12. அன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி **திரு மா.கணேசராசா** முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாகப் பதவிப் பிரமாணம் செய்துள்ளமையையும் உளமார வாழ்த்தி தொடர்ந்தும் பல பதவிகள் பெற்று மக்கள்பணி சிறக்க மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம். (7591)



**வாழ்த்துவோர் :-**
**ஆசிரியர் நலன்புரி சங்கம்**
**D-10**
**உருத்திரபுரம், கிளிநொச்சி. கிளி/உருத்திரபுரம் ம.வி.**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.